தினமணி

# தண்ணீருக்காக கண்ணீர் விடும் கடைமடை விவசாயிகள்

த. தேவராஜ்

First Published : 03 Oct 2010 01:04:22 PM IST

கடலூர், அக். 2: கடலூர் மாவட்ட காவிரி டெல்டா சம்பா சாகுபடிப் பகுதிகளில், முறையான நீர் மேலாண்மை இல்லாததால், ஒரு புறம் தண்ணீர் பற்றாக்குறையும் மறுபுறம் தண்ணீர் வீணாகும் நிலையும் இருப்பதாக விவசாயிகள் கூறுகிறார்கள்.

÷கடலூர் மாவட்டத்தில் 1.5 லட்சம் ஏக்கர் நிலங்கள் காவிரி நீரால் பாசன வசதி பெறுகின்றன. மேட்டூர் அணையில் போதிய நீர் இருப்பு இருந்து, ஆகஸ்ட் 15-ம் தேதிக்குள் முழுமையாகத் தண்ணீர் கிடைத்தால், அனைத்துப் பகுதிகளிலும் அக்டோபர் 15-ம் தேதிக்குள் சம்பா சாகுபடிப் பணிகள் நிறைவடைந்து விடும்.

÷இந்த ஆண்டு மேட்டூர் அணை ஜூன் 28-ல் திறக்கப்பட்டு, கடலூர் மாவட்டக் காவிரிப் பாசனத்துக்கு கீழணையில் இருந்து ஆகஸ்ட் 11-ம் தேதி தண்ணீர் திறக்கப்பட்டது.

÷எனினும் போதிய தண்ணீர் திறக்கப்படாததால், சாகுபடிப் பணிகள் தாமதம் அடைந்து வருவதாக, விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷வெள்ளிக்கிழமை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 73 அடி. கடலூர் மாவட்ட டெல்டா பாசனப் பகுதிகளுக்குக் காவிரி நீரைப் பகிர்ந்து அளிக்கும் கீழணையில், வெள்ளிக்கிழமை நீர் மட்டம் 5 அடியாக இருந்தது.

÷(மொத்த உயரம் 9 அடி) அணையில் இருந்து வடவாறில் (வடவாறு நேரடிப் பாசனம், வீராணம் ஏரிப் பாசனம் மற்றும் சென்னை குடிநீருக்காக) 1,506 கனஅடி நீர் திறக்கப்பட்டு உள்ளது. வடவாறின் முழு விநியோகத்திறன் 2,200 கன அடி.

÷வடக்குராஜன் வாய்க்காலில் 124 கன அடியும், குமிக்கி மண்ணியாறில் 96 கனஅடியும் திறக்கப்பட்டு உள்ளது.

÷மேட்டுப் பாங்கான வடவாறு நேரடிப்பாசனப் பகுதிகள் மற்றும் வடக்குராஜன் வாய்க்கால் பகுதிகளில், 40 ஆயிரம் ஏக்கரில் தற்போது நாற்று நடவுப் பணிகள் நடந்து வருகின்றன.

÷உரிய நேரத்தில் போதுமான அளவுக்கு தண்ணீர் கிடைக்காததால், கடைமடைப் பகுதிகளான வீராணம் பாசனப் பகுதிகள், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு பாசனப் பகுதிகள் ஆகியவற்றில், தற்போதுதான் நாற்றங்கால் பணிகள் நடந்து வருகின்றன.

÷கடைமடைப் பகுதிகளில் நடவுப் பணிகள் அக்டோபர் கடைசி வாரத்தில் அல்லது நவம்பர் முதல் வாரத்தில்தான் தொடங்க வாய்ப்பு இருப்பதாக என்று கடைமடைப் பாசன விவசாயிகள் தெரிவிக்கிறார்கள்.

÷நடவுப் பணிகள் தாமதம் ஆவதால், செம்மை நெல் சாகுபடி முறையைக் கடைப்பிடிக்க முடியாத நிலையும், புதிதாக நடப்பட்ட நெல்பயிர், வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்படும் வாய்ப்பும் இருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கிறார்கள்.

உரிய நேரத்தில்...÷

÷வீராணம் ஏரிப் பாசன விசாயிகள் சங்கத் தலைவர் இளங்கீரன் கூறுகையில், "உரிய நேரத்தில் மேட்டூரில் தண்ணீர் திறந்தும், கடலூர் மாவட்ட பாசனப் பகுதிகளுக்கு போதிய தண்ணீர் கிடைக்கவில்லை.

÷இதனால் நடவுப் பணிகள் நடைபெறும் வடவாறு நேரடிப் பாசனம், மற்றும் வடக்குராஜன் வாய்க்கால் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் பற்றாக்குறை உள்ளது' என்றார்.

நடவுப் பணிகள் தாமதம்

÷பாசிமுத்தான் ஓடைப் பாசன விவசாயிகள் சங்கத் தலைவர் ரவீந்திரன் கூறுகையில், "தண்ணீர் பற்றாக்குறை, வேலைக்கு ஆள்கள் கிடைக்காத நிலை காரணமாக நடவுப் பணிகள் தாமதம் அடைந்து உள்ளன. வீராணம், சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு ஆகிய கடைமடைப் பாசனப் பகுதிகளில், நாற்றங்கால் பணிகள் தற்போதுதான் தொடங்கப்பட்டு உள்ளன. நாற்று நடவுப் பணிகள் நவம்பர் கடைசியில்தான் முடிவடையும் என்று எதிர்பார்க்கிறோம்.

÷நாற்று நடவுப் பணிகள் நடந்து வரும் பகுதிகளுக்கு போதிய தண்ணீர் இல்லை. ஆனால் நாற்றங்கால் பணிகள் நடந்து வரும் பகுதிகளுக்கு நிறைய தண்ணீர் திறந்து விடுவதால் நிறைய வீணாகிறது. இதற்கு நீர் மேலாண்மை சரி இல்லாததே காரணம்.÷தற்போது நாற்றங்கால் பணிகள் நடந்து வரும் பகுதிகளுக்கு 24 மணி நேரமும் தண்ணீர் திறந்து வீணாகிக் கொண்டு இருக்கிறது. நாற்றங்கால் பணிகளுக்குக் காலை 8 முதல் இரவு 7 மணி வரை தண்ணீர் திறந்தால் போதும். இரவில் ஷட்டர்களை மூட வேண்டும். இதன் மூலம் நாற்று நடவுப் பகுதிகளுக்கு கூடுதல் தண்ணீர் கொடுக்க முடியும் என்றார்.÷இது குறித்து பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் செல்வராஜ் கூறியது: "கடலூர் மாவட்ட காவிரி டெல்டா பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் திருப்திகரமாக உள்ளது. மழையும் பெய்து வருகிறது.

÷கடைமடைப் பகுதிகளுக்கும் போதிய தண்ணீர் வழங்குகிறோம். நாற்றங்கால் பணிகள் நடைபெறும் பகுதிகளில் இரவு நேரங்களில் ஷட்டர்கள் மூடப்படுகின்றன. எனவே தண்ணீர் வீணாகவில்லை' என்றார்.

## தருமபுரி உழவர் சந்தையில் ஒரேநாளில் 46 டன் காய்கறிகள் விற்பனை

First Published : 03 Oct 2010 12:52:46 PM IST

தருமபுரி, அக்.2: தருமபுரி உழவர் சந்தையில் சனிக்கிழமை ஒரே நாளில் | 5.77 லட்சம் மதிப்பிலான 46 டன் காய்கறிகள் விற்பனையாகியுள்ளன.

வழக்கமாக இச்சந்தையில் தினமும் 35 டன் காய்கறிகள் விற்பனையாவது வழக்கம். இந்நிலையில் புரட்டாசி மாதத்தின் 3-ம் சனிகிழமை என்பதால் காலை 4.30 மணி முதல் வாடிக்கையாளர்கள் குவியத்தொடங்கினர் (படம்).

இச்சந்தையில் தினமும் 100 வியாபாரிகள் கடைகள் வைத்திருந்த நிலையில் சனிக்கிழமை 152 பேர் கடைவைத்திருந்தனர்.

வெளி மார்க்கெட்டில் அவரைக்காய் | 30, கொத்தவரைக்காய் | 25 விற்பனை செய்யப்பட்டது.

ஆனால், உழவர் சந்தையில் அவரைக்காய் | 22-க்கும், கொத்தவரைக்காய் | 20-க்கும் விற்பனை செய்யப்பட்டன. மற்ற காய்கறிகள் அனைத்தும் கிலோ | 10-க்குள் விற்பனையானது. சனிக்கிழமை ஒரே நாளில் 13 ஆயிரத்து 700 வாடிக்கையாளர்கள் காய்கறிகள் வாங்க சந்தைக்கு வந்துள்ளனர் என வேளாண் துணை அலுவலர் எஸ்.இளங்கோவன், உதவி வேளாண் அலுவலர்கள் பழனி, நரசிம்மன் ஆகியோர் தெரிவித்தனர்.

## நெற்பயிருக்கு காப்பீடு

First Published : 03 Oct 2010 09:53:47 AM IST

ஈரோடு, அக். 2: சம்பா பருவ நெற்பயிர் சாகுபடி செய்துள்ள விவசாயிகள், அரசு மானியத் திட்டத்தின் கீழ் பயிர்க் காப்பீடு செய்து கொள்ளலாம் என்று வேளாண் இணை இயக்குநர் மோகன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியது: ஈரோடு மாவட்டத்தில் தற்போது சம்பா பருவத்தில் நெற்பயிர் சாகுபடி செய்து, கூட்டுறவு வங்கியிலோ அல்லது பிற வங்கிகளிலோ கடன் பெறாத விவசாயிகளுக்கு, தேசிய வேளாண் பயிர்க் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. சாதாரணமாக ஒரு ஏக்கருக்கு உத்தரவாத மகசூல் மதிப்பு |10,312 எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

இதற்கு 2 சத பிரிமியத் தொகையாக |206 செலுத்த வேண்டும். தமிழக அரசு, சிறு, குறு விவசாயிகளுக்கு 55 சத பிரிமியத் தொகையான |113-ம், இதர விவசாயிகளுக்கு 50 சத பிரிமியத் தொகையான |103-ம் மானியமாக அளிக்கிறது. எஞ்சிய தொகையை வரும் 31}ம் தேதிக்குள் செலுத்த வேண்டும்.

## வேளாண் கருத்தரங்கு: 50 விவசாயிகள் தேர்வு

First Published : 03 Oct 2010 09:53:35 AM IST

ஈரோடு, அக். 2: வேளாண்ப ம மற்றும் விற்பனைத் துறை சார்பில், ஆத்மா திட்டத்தின் கீழ் கோவை வேளாண்மைக் கருத்தரங்கில் கலந்து கொள்ள 50 விவசாயிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து பெருந்துறை வேளாண் வணிகக் கோட்ட வேளாண் அலுவலர் குழந்தைவேலு கூறியது: மாவட்ட வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை சார்பில் பெருந்துறை, சென்னிமலை, பவானி, அம்மாபேட்டை, சென்னம்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த 50 விவசாயிகள், ஆத்மா திட்டத்தின் கீழ் கண்டுனர் சுற்றுலா செல்வதற்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கோவை கொடீசியா வளாகத்தில் நடைபெற்று வரும் தென்மண்டல வேளாண்மைக் கண்காட்சி, கருத்தரங்கில் இந்த விவசாயிகள் ஞாயிற்றுக்கிழமை (அக்.3) பங்கேற்க உள்ளனர்.

இக்கண்காட்சியில் வேளாண்மை, தோட்டக்கலை, சொட்டுநீர்ப் பாசன முறைகளில் உயர் தொழில்நுட்ப விவரங்களை அறிந்து கொள்ளலாம்.

தொழில்நுட்பச் சுற்றுலாவில் கலந்து கொள்ளும் 50 விவசாயிகளும், அவர்களின் பகுதிகளில் உள்ள விவசாயிகளைச் சந்தித்து, தாங்கள் தெரிந்து கொண்ட திட்டங்கள், தொழில்நுட்பங்கள் குறித்து விளக்க வேண்டும்.

## விவசாயிகளை இணைத்து மலைவேம்பு மரம் மூலம் மின் உற்பத்தி

First Published : 02 Oct 2010 09:50:37 AM IST

ஈரோடு, அக். 1: மலை வேம்பு மரங்களைப் பயன்படுத்தி | 15 கோடி செலவில் 3 மெகாவாட் மின் உற்பத்தி நிலையத்தை ஈரோடு மாவட்டத்தில் அமைக்க மாநில திட்டக்குழு திட்டமிட்டுள்ளது.

இது குறித்து மாநில திட்டக்குழு உறுப்பினர் குமாரவேலு தெரிவித்தது:

அனல் மின்நிலையம், காற்றாலை, சூரிய சக்தி உள்ளிட்ட பல்வேறு முறைகளில் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. மின் உற்பத்தி, விற்பனை, நுகர்வோர் எண்ணிக்கை ஆகியவற்றில் தமிழகம் மூன்றாவது இடத்தில் உள்ளது. தனிநபர் மின் பயன்பாட்டில் 6-வது இடத்தில் உள்ளது.

பருவநிலை மாற்றங்களால் காற்றாலை மின் உற்பத்தி எதிர்பார்த்த அளவு கை கொடுக்கவில்லை. புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்கள் மூலம் மின் உற்பத்தி செய்ய மத்திய,மாநில அரசுகள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன.

தமிழ்நாடு மாநில திட்டக்குழு சார்பில் சுற்றுச் சூழலைப் பாதிக்காத வகையில் விவசாயிகள், மின்வாரியம், தமிழ்நாடு காகிதத் ஆலை நிறுவனம் இணைந்து முதன்முறையாக மலைவேம்பு மரங்களைக் கொண்டு மின் உற்பத்தியை தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாநில திட்டக்குழு சார்பில் ஈரோடு மாவட்டம் சென்னம்பட்டியில் மின்னுற்பத்தி நிலையம் அமைக்கப்பட உள்ளது.

விவசாயிகளின் ங்களிப்புடன் தமிழ்நாடு மின்வாரியம், தமிழ்நாடு காகித ஆலை நிறுவனம் இணைந்து இத்திட்டத்தை நிறைவேற்ற உள்ளன. ஒரு மெகாவாட் மின் உற்பத்தி நிலையம் தொடங்க | 5 கோடி செலவாகும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தம் | 15 கோடி செலவில் 3 மெகாவாட் மின்னுற்பத்தி நிலையம் துவங்கப்பட உள்ளது.

100 விவசாயிகளை இணைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது. ஓர் ஏக்கரில் ஓராண்டில் 40 டன் மகசூல் கிடைக்கும் அளவுக்கு மலைவேம்பு வீரிய ஒட்டு ரகங்கள் அறிமுகப்படுத்தப்பட்டு விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

தமிழகத்தில் 148 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் உள்ளன. இதில் 48 லட்சம் ஏக்கர் விளை நிலங்கள் பயிர் செய்யப்படாமல் உள்ளது. இவற்றில் மலைவேம்பு பயிரிட அறிவுறுத்தப்பட்டு, மானிய விலையில் மலை வேம்பு செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படும். இத்திட்டம் மாநிலம் முழுவதும் பின்னர் விரிவுபடுத்தப்படும் என்றார்.

## மரக்கன்றுகள், பழ மரக்கன்றுகள் உற்பத்தி பயிற்சி

First Published : 01 Oct 2010 08:02:24 AM IST

நாகப்பட்டினம், செப். 30: நாகையை அடுத்த சிக்கலில் உள்ள வேளாண் அறிவியல் நிலையத்தில் மரக்கன்றுகள் மற்றும் பழ மரக்கன்றுகள் உற்பத்தி பயிற்சி முகாம் அண்மையில் நடைபெற்றது.

வனவியல் துறை இணைப் பேராசிரியர் இரா. ரேவதி, மரக்கன்றுகள் உற்பத்தி குறித்த தொழில்நுட்பங்களை விளக்கி, மரக்கன்றுகள் உற்பத்தி முறை, நடவு மற்றும் பராமரிப்புகள் குறித்து விளக்கினார்.

தோட்டக்கலைத் துறை உதவிப் பேராசிரியர் கோ. மாலதி பழ மரக்கன்றுகள் உற்பத்தி குறித்த தொழில்நுட்பப் பயிற்சி அளித்தார். பழ மரக்கன்றுகளில் ஒட்டுக்கட்டுதல், மொட்டுக்கட்டுதல், விண் பதியன், தொட்டி பதியன் ஆகியன குறித்து ஒளி, ஒலிக் காட்சிகளுடன் விளக்கம் அளித்தார்.

பயிற்சி முகாமுக்கான ஏற்பாடுகளை தொழில்நுட்ப அலுவலர் வீ. ஞானபாரதி செய்திருந்தார்.

## துவரை விதைப் பண்ணை வயலில் ஆய்வு

First Published : 03 Oct 2010 09:37:16 AM IST

நாமக்கல், அக். 2: நாமக்கல்லில் விதைப்பண்ணை வயலில், கோவையைச் சேர்ந்த விதைச் சான்றுத் துறை இணை இயக்குநர் செல்வம் சனிக்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பயறு உற்பத்தியைப் பெருக்கவும், உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், துவரைப் பயிரில் ஐசிபிஎல்-85063 என்ற ரகம் அறிமுகப்படுத்தப்பட்டு, விதைப் பண்ணைகள் அமைக்கப்படுள்ளன.

இதன்படி, அனைத்து மாவட்டங்களிலும் விதைப்பண்ணைகள் அமைத்து, பயறு உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாவட்டத்தில், வரகுராம்பட்டி கிராமத்தில் பழனிசாமி என்பவரது தோட்டத்தில் 2 ஏக்கர் பரப்பில் விதைப் பண்ணை அமைக்கப்பட்டுளளது. வளர்ச்சிப் பருவத்தில் உள்ள இந்தப் பண்ணையை, கோவை விதைச் சான்றுத் துறை இணை இயக்குநர் செல்வம், விதை ஆய்வு இணை இயக்குநர் கோபால், நாமக்கல் விதைச் சான்று உதவி இயக்குநர் சுப்ரணியம் ஆகியோர் சனிக்கிழமை ஆய்வு செய்தனர்.

துவரைப் பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்கும் தொழில்நுட்பங்களை அனைத்து விவசாயிகளும் பின்பற்ற வேண்டும். இதற்கு முன்னோடியாக உள்ள விதைப்பண்ணையை இதர விவசாயிகள் பார்வையிட்டு, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று ஆய்வு மேற்கொண்ட அலுவலர்கள் வலியுறுத்தினர்.

## இயற்கைத் தேயிலைக்கு வெளிநாட்டுச் சந்தையில் அதிக வரவேற்பு

First Published : 03 Oct 2010 09:54:43 AM IST

கூடலூர், அக். 2: இயற்கைத் தேயிலைக்கு ஐரோப்பா உள்ளிட்ட வெளிநாடுகளில் அதிக வரவேற்பு உள்ளதாக தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் கூறினார்.

நீலகிரி வயநாடு தோட்ட அதிபர்களின் 91-வது கூட்டம், அதன் தலைவர் பூனச்சா தலைமையில் தேவர்சோலையில் வெள்ளிக்கிழமை இரவு நடைபெற்றது. இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தேயிலை வாரிய செயல் இயக்குநர் ஆர்.அம்பலவாணன் பேசியது:

செக்ஷன்-17 நிலப் பிரச்னை குறித்து மாவட்ட ஆட்சியருக்கு எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்து, மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்ல முயற்சிக்கப்படும்.

தொழிலாளர் பற்றாக்குறையைப் போக்க, இயந்திரமயமாதல் அவசியமாகும். இயந்திரங்களுக்கு அரசின் மானியம் தொடர்ந்து பெற்றுத் தரப்படும்.

கலப்படத் தேயிலைத் தூள் தயாரிப்போர் குறித்து தொடர்ந்து கண்காணித்து, உரிய நடவடிக்கைகள் எடுத்து வருகிறோம். தொழிற்சாலைக் கழிவுகளை தேயிலைக் கலப்படத்திற்குப் பயன்படுத்தாமல் கண்காணிக்கும் பணியும் நடைபெற்று வருகிறது.

நடைபெற உள்ள தேயிலைச் சுற்றுலா விழாவில் தோட்ட அதிபர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்றார்.

சங்கத் தலைவர் (தேர்வு) தயா அச்சா, ணைத் தலைவர் பவின்யாதாவ், செயற்குழு உறுப்பினர்கள் அய்னா, ராÔ ஜ்குமார், அசோக்ராம்பூரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மண் அரிப்பை தடுக்க வெட்டிவேர்

First Published : 01 Oct 2010 09:57:46 AM IST

கூடலூர், செப். 30: வெட்டி வேரை நடுவதன் மூலம் மண் அரிப்பைத் தடுக்கலாம் என்று பள்ளி மாணவியர் சுற்றுச்சூழல் ஆய்வறிக்கை தயாரித்துள்ளனர்.

கூடலூர் மார்னிங் ஸ்டார் பள்ளி மாணவியர் ஐரின், சுனிஷ், அபிலாஷ், சுபிக்ஷ Ô,பிரியா ஆகியோர் சுற்றுச் சூழல் தொடர்பாக ஆய்வு செய்து அறிக்கை தயாரித்துள்ளனர்.

மலைப் பிரதேசங்களில் சரிவான பகுதிகளில் வெட்டி வேரை நடுவதன் மூலம் மண் அரிப்பை தடுக்க முடியும். மண் வளத்தை பாதுகாப்பதால் சுற்றுச் சூழலையும் பாதுகாக்கலாம். மண்ணின் ஈரப்பதம் பெருகுவதால் செடி, கொடிகள் வளரவும் உதவியாக இருக்கும் என்றும் ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களுக்கு மாணவியர் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளதாகப் பள்ளி நிர்வாகம் அறிவித்துள்ளது.

## "ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம்' சாகுபடி திட்டத் தொடக்க விழா

First Published : 02 Oct 2010 11:33:53 AM IST

பெரம்பலூர், அக். 1: பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை அருகேயுள்ள நெற்குணம் கிராமத்தில் இந்திய பருத்திக் கழகம், ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் ஆகியன சார்பில் "ஒரு கிராமத்தில் ஒரு பருத்தி ரகம்' சாகுபடி திட்டத் தொடக்க விழா வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்திய பருத்திக் கழக உதவிப் பொது மேலாளர் பி.டி. பிள்ளைவார் தலைமை வகித்து, திட்டத்தைத் தொடக்கிவைத்தார். வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி நிலையத் தலைவர் ஆர். கவிமணி, வேளாண்மை துணை இயக்குநர் (மத்தியத் திட்டம்) வே. விஜயகுமார், வேப்பந்தட்டை வேளாண் உதவி இயக்குநர் ஏ. சேகர், ஊராட்சி மன்றத் தலைவர் பெ. வரதராசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மண் அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர் ஆர். பிரிஸ்கா பிளேவியா நுண்ணூட்ட மேலாண்மை குறித்தும், பயிர் பாதுகாப்பு தொழில்நுட்ப வல்லுநர் சி. சங்கர் பூச்சி மேலாண்மை குறித்தும், பருத்தி ஆராய்ச்சி மைய நோயியல் உதவிப் பேராசிரியர் டி. ஆனந்த் நோய் மேலாண்மை குறித்தும் விளக்கினர்.

பின்னர், அந்தப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி வயலில் விவசாயிகளுடன் வயல் சூழல் ஆய்வு மேற்கொண்டு, நோய் மற்றும் பூச்சி மேலாண்மைக்காக கையாள வேண்டிய நெறிமுறைகள் குறித்து விளக்கப்பட்டது.

இதில், 200-க்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, இந்திய பருத்திக் கழக உதவி மேலாளர் ஏ. கிருஷ்ணமூர்த்தி வரவேற்றார். ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத் திட்ட ஒருங்கிணைப்பாளர் இரா. மாரிமுத்து நன்றி கூறினார்.

## பழைய மின் மோட்டாரை ஒப்படைக்க அறிவுறுத்தல்

First Published : 01 Oct 2010 07:55:18 AM IST

பெரம்பலூர், செப். 30: தமிழக அரசின் இலவச மின் மோட்டார் பொருத்தப்பட்டவுடன், விவசாயிகள் மின் இணைப்பில் உள்ள பழைய மின் மோட்டாரை ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பெரம்பலூர் மின் பகிர்மான மேற்பார்வைப் பொறியாளர் தே. பிரபாகரன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு திறன்மிகு மின் மோட்டார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி, விவசாய மின் இணைப்புகளுக்குரிய புதிய திறன்மிகு இலவச மின் மோட்டார் பொருத்தப்பட்டவுடன், தற்போது விவசாய மின் இணைப்பில் உள்ள பழைய மின் மோட்டாரை விவசாயிகள் மின் சேமிப்பு குழுமத்திடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், மின் இணைப்பில் மின் அளவீட்டுக் கருவி பொருத்தவும் மின் சேமிப்புக் குழுமத்தை அனுமதிக்க வேண்டும்.

இலவச மின் மோட்டார்களில் மின் சேமிப்பை கண்டறியவற்காகவே மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்படுகிறது. மின் உபயோகத்தைக் கணக்கிட்டு கட்டணம் வசூல் செய்வதற்காக இல்லை.

புதிதாக பொருத்தப்படும் திறன்மிகு மின் மோட்டார் விவசாயிகளின் மின் இணைப்பில் ஐந்து ஆண்டுகள் சோதனை ஆய்வு முடியும் வரை இயக்கத்தில் இருக்க வேண்டும். எனவே, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், இந்தத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு மின் பற்றாக்குறையை ஈடுசெய்ய முன் வர வேண்டும் என்றார் அவர்.

## பழைய மின் மோட்டாரை ஒப்படைக்க அறிவுறுத்தல்

First Published : 01 Oct 2010 07:55:18 AM IST

பெரம்பலூர், செப். 30: தமிழக அரசின் இலவச மின் மோட்டார் பொருத்தப்பட்டவுடன், விவசாயிகள் மின் இணைப்பில் உள்ள பழைய மின் மோட்டாரை ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பெரம்பலூர் மின் பகிர்மான மேற்பார்வைப் பொறியாளர் தே. பிரபாகரன் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு திறன்மிகு மின் மோட்டார் வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இதன்படி, விவசாய மின் இணைப்புகளுக்குரிய புதிய திறன்மிகு இலவச மின் மோட்டார் பொருத்தப்பட்டவுடன், தற்போது விவசாய மின் இணைப்பில் உள்ள பழைய மின் மோட்டாரை விவசாயிகள் மின் சேமிப்பு குழுமத்திடம் ஒப்படைக்க வேண்டும். மேலும், மின் இணைப்பில் மின் அளவீட்டுக் கருவி பொருத்தவும் மின் சேமிப்புக் குழுமத்தை அனுமதிக்க வேண்டும்.

இலவச மின் மோட்டார்களில் மின் சேமிப்பை கண்டறியவற்காகவே மின் அளவீட்டுக் கருவி பொருத்தப்படுகிறது. மின் உபயோகத்தைக் கணக்கிட்டு கட்டணம் வசூல் செய்வதற்காக இல்லை.

புதிதாக பொருத்தப்படும் திறன்மிகு மின் மோட்டார் விவசாயிகளின் மின் இணைப்பில் ஐந்து ஆண்டுகள் சோதனை ஆய்வு முடியும் வரை இயக்கத்தில் இருக்க வேண்டும். எனவே, பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள், இந்தத் திட்டத்தில் தங்களை இணைத்துக் கொண்டு மின் பற்றாக்குறையை ஈடுசெய்ய முன் வர வேண்டும் என்றார் அவர்.

## வெளிநாட்டில் வேலை: விவசாயிகளிடம் | 4.60 லட்சம் மோசடி

First Published : 02 Oct 2010 10:55:33 AM IST

சேலம், அக். 1: அரபு நாட்டில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி ஓமலூரைச் சேர்ந்தவர் | 4.60 லட்சம் மோசடி செய்துள்ளதாக ராமநாதபுரத்தைச் சேர்ந்த விவசாயிகள் சேலம் மாவட்ட ஆட்சியரிடம் வெள்ளிக்கிழமை புகார் தெரிவித்தனர்.

ராமநாதபுரம் மாவட்டம் சாயல் குடியைச் சேர்ந்த அந்தோணிமுத்து (34), செல்வராஜ் (39), அப்பாஸ் (29), ஜெயராஜ் (35), கருங்குளத்தைச் சேர்ந்த கருப்பசாமி (52), ஊர்க்காவலன் ஆகியோர் சேலம் மாவட்ட ஆட்சியர் சந்திரகுமாரிடம் அளிó த்த மனு விவரம்:

விவசாயம், தச்சுத் தொழில் செய்து வரும் நாங்கள் சென்னையைச் சேர்ந்த ஒரு நபர் மூலம் ஓமலூர் தண்ணீர்த் தொட்டியைச் சேர்ந்த ஷாஜகான் (47) என்பவரிடம் அறிமுகமானோம். ஷாஜகான் எங்களுக்கு செü தி அரேபியாவில் வேலை வாங்கிக் கொடுப்பதாக கூறினார். இதையடுத்து அனைவரும் சேர்ந்து | 4.60 லட்சம் பணம் திரட்டினோம்.

ஷாஜகான் கூறியபடி அவரது பெயரிலும், அவரது மனைவி, உறவினர்கள் பெயரிலும் வங்கிக் கணக்கில் பணத்தைக் கட்டினோம். இதையடுத்து அவர் எங்களுக்கு விசா வாங்கிக் கொடுத்தார்

## ஐ.டி.பி.ஐ. வங்கியில் தென்னங் கன்றுகள் வழங்கும் விழா

First Published : 02 Oct 2010 12:14:23 PM IST

சிவகங்கை, அக். 1: சிவகங்கை ஐடிபிஐ வங்கியில் வெள்ளிக்கிழமை காலை இலவச தென்னங்கன்றுகள் வழங்கும் விழா நடைபெற்றது.

விழாவில், எம்எல்ஏ குணசேகரன் தென்னங்கன்றுகளை வழங்கிப் பேசியது:

வங்கிகள் நிதியைத் திரட்டுவதிலும், அந்த நிதியை மக்களுக்குக் கடனாக வழங்குவதிலும் சிறந்து விளங்குகின்றன.

நம் நாடு விவசாயத்தையும் அதைச் சார்ந்த பொருளாதாரத்தையும் மையமாகச் செயல்படும் கிராமங்களைதான் நம்பி இருக்கின்றன.

விவசாயிகளிடம் வங்கிகள் உபசரிப்பு முறையைக் கையாள வேண்டும். வங்கிள் பணத்தை பூட்டி வைக்காமல் அந்த பணத்தை மக்களின் வாழ்க்கை வளர்ச்சிக்கு உதவுமாறு செய்யவேண்டும் என்றார்.

விழாவில், மாவட்ட ஊராட்சித் தலைவர் அரசனூர் பாண்டியன், நகராட்சித் தலைவர் நாகராஜன், மாவட்ட வேளாண்மைப் பிரிவு இணை இயக்குநர் தங்கச்சாமி பாண்டியன், ஆக்ஸ்போர்டு பள்ளித் தாளாளர் சியாமளா, வங்கி கிளை மேலாளர் கணேஷ்கிளி ஆகியோர் கலந்து கொண்டனர்,

வங்கி உதவி மேலாளர் புதுராஜன் நன்றி கூறினார்.

## கூட்டுறவுத் துறை மூலம் சொட்டு நீர்ப் பாசனக் கடன் ரூ. 3.20 கோடி வழங்க இலக்கு

First Published : 01 Oct 2010 08:51:01 AM IST

தேனி, செப். 30: தேனி மாவட்டத்தில் கூட்டுறவுத் துறை சார்பில் தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம் சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பதற்கு விவசாயிகளுக்கு கடன் வழங்க ரூ. 3.20 கோடி வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து கூட்டுறவுத் துறை அலுவலர்கள் கூறியதாவது:

தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் மூலம் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்கும் விவசாயிகளுக்கு 65 சதவீதம் மானிய உதவியுடன் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தில் அதிகபட்சம் ஒரு ஹெக்டேர் பரப்பளவில் நிலம் வைத்துள்ள விவசாயிகள் பயன் பெறலாம். குறைந்த அளவு நிலம் உள்ள ஒரே பகுதியைச் சேர்ந்த 20 விவசாயிகள் தொகுப்பாகச் சேர்ந்து இந்தத் திட்டத்தில் விண்ணப்பிக்கலாம்.

தோட்டக் கலைத் துறை பரிந்துரையில், காய்கறிப் பயிர்களுக்கும், நில வள, நீர் வளத் திட்டத்தின் பரிந்துரையில் அனைத்துப் பயிர்களுக்கும் சொட்டு நீர் பாசனத்துக்கு மானியக் கடன் வழங்கப்படும். இந்தத் திட்டத்தில் இந்த ஆண்டு கடன் வழங்க ரூ. 3.20 கோடி இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை ரூ. 66 லட்சம் கடன் வழங்கப்பட்டுள்ளது. ரூ. 1.32 கோடிக்கான கடன் விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

சொட்டு நீர்ப் பாசனத்துக்கு மானிய உதவியில் கடன் பெற விரும்பும் விவசாயிகள் நிலத்தின் சிட்டா, அடங்கல், குத்தகை ஒப்பந்தப் பத்திரம், வரைபடம், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள், மண் மற்றும் தண்ணீர்ப் பரிசோதனை அறிக்கை, அங்கீகரிக்கப்பட்ட சொட்டு நீர்ப் பாசன நிறுவனத்தின் அறிக்கை மற்றும் மதிப்பீடு ஆகியவற்றுடன் அந்தந்தப் பகுதிகளில் உள்ள தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கி, கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப் பதிவாளர் அலுவலகம் ஆகியவற்றில் தொடர்பு கொள்ளலாம் என்றனர்.

## காபி வாரிய ஆலோசனைக் குழு உறுப்பினராக போடி விவசாயி நியமனம்

First Published : 01 Oct 2010 08:51:31 AM IST

போடி, செப்.30: காபி வாரிய மண்டல ஆலோசனைக் குழு உறுப்பினராக, போடியைச் சேர்ந்த விவசாயி ராஜா நியமனம் செய்யப்பட்டுள்ளார். திண்டுக்கல்லை அடுத்து தாண்டிக்குடியில் மண்டல காபி ஆராய்ச்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் சார்பில், மண்டல ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதன்

உறுப்பினராகப் போடியைச் சேர்ந்த காபி விவசாயி ராஜா நியமிக்கப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை, மண்டல காபி ஆராய்ச்சி மையத் துணை இயக்குநர் (ஆராய்ச்சி) வழங்கியுள்ளார்.

## கோவில்பட்டியில் பாம்பு வடிவ காளான்

First Published : 03 Oct 2010 02:27:30 PM IST

கோவில்பட்டி, அக். 2: கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 9-வது தெருவில் மண்ணில் தெரிந்த பாம்பு வடிவ காளானை கண்டு அப்பகுதி மக்கள் ஆச்சரியப்பட்டனர்.

கோவில்பட்டி வீரவாஞ்சி நகர் 9-வது தெருவைச் சேர்ந்தவர் சோமசுந்தரம் மகன் சந்தானம். இவர் இப்பகுதியில் கடை நடத்தி வருகிறார்.

இக்கடை அருகே சனிக்கிழமை காலை 3 பாம்புகள் அப்பகுதியில் ஓடுவதைக் கண்டாராம். அதில் ஒரு பாம்பு அருகில் இருந்த கல்லுக்குள் சென்று மறைந்துகொண்டதாம்.

சிறிது நேர்த்தில் அந்த கல் அருகே மண்ணிலிருந்து பாம்பு வடிவில் 3 தலைகள் இருக்கும் விதத்தில் ஓர் உருவம் தெரிந்ததாம்.

இதைக் கண்ட அப்பகுதி பொதுமக்கள் உடனே அந்த உருவத்தை சுற்றி, செங்கல் வைத்து வேப்பிலை, மஞ்சள், பால் ஊற்றி, வழிபடத் தொடங்கினர்.

இதுகுறித்து அப்பகுதியை சேர்ந்த சிலரிடம் விசாரித்தபோது, தற்போது மழைக் காலம் என்பதால் மண்ணிலிருந்து முளைத்த ஒருவகை காளான்தான் இது எனத் தெரிவித்தனர்.

## "பயறு வகை உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் கட்டாயம்'

First Published : 03 Oct 2010 11:34:47 AM IST

திருச்சி, அக்.2: பயறு வகை உற்பத்தியை அதிகரிப்பது காலத்தின் கட்டாயம் என்றார் இப்கோ நிறுவன மாநில விற்பனை மேலாளர் எம். கிருஷ்ணன்.

திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண்மைக் கல்லூரி, ஆய்வு நிலையத்தில் இந்திய உழவரின் உரக் கூட்டுறவு (இப்கோ) நிறுவனமும், கல்லூரி நிர்வாகமும் இணைந்து நடத்திய பயறு வகை உற்பத்திக்கான தொழில்நுட்பக் கருத்தரங்கத்தில் அவர் மேலும் பேசியது:

"பயறு வகை உற்பத்தி நம் நாட்டில் குறைவாகவே உள்ளது. ஆனால், தேவை அதிகமாக இருக்கிறது. எனவே, பயறு வகை உற்பத்தியை அதிகரிக்க அரசுத் திட்டமிட்டுள்ளது.

வேளாண் அதிகாரிகளிடம் ஆலோசனைப் பெற்று உளுந்து உள்ளிட்ட பயறு வகை சாகுபடியைச் சரிவர மேற்கொள்ள விவசாயிகள் முன்வர வேண்டும். தொழில்நுட்பங்களைக் கடைப்பிடித்தால் ஹெக்டேருக்கு சராசரியாக 650 முதல் 700 கிலோ கிடைத்து வரும் மகசூல் 900 முதல் 1,000 கிலோவாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

தண்ணீர் பிரச்னையை தவிர்க்க சொட்டு நீர்ப்பாசன முறையைக் கடைப்பிடிக்கலாம். இதேபோல, தொழிலாளர் பற்றாக்குறைக்கு இயந்திரங்களைப் பயன்படுத்தலாம்.

மண் பரிசோதனை செய்து சாகுபடி மேற்கொண்டால், மண் வளத்துக்கு ஏற்ப உரத்தை இடலாம். இதன் மூலம், தேவையான அளவுக்கு உரிய உரங்களை மட்டும் பயன்படுத்த வாய்ப்பாக இருக்கும். மேலும், தேவையற்ற உரச் செலவையும் குறைக்க முடியும். இயன்ற வரைக்கும் இயற்கை உரத்தைப் பயன்படுத்த விவசாயிகள் முன்வர வேண்டும்.

இப்கோ நிறுவனம் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சிம் கார்டு போல கிரீன் கார்டுகள் விவசாயிகளுக்கு அளிக்கப்படுகின்றன. இதன் மூலம், விவசாயிகளுக்குத் தேவையான தகவல்கள் செல்பேசி மூலம் தெரிவிக்கப்படுகின்றன.

மேலும், சங்கடஹரன் என்ற தனிநபர் விபத்து காப்பீட்டுத் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது' என்றார் கிருஷ்ணன்.

கூட்டுறவு சங்கங்களின் திருச்சி மண்டல இணைப் பதிவாளர் இராம. ஜயம் பாண்டியன் தலைமை வகித்தார்.

சிறுகமணி கரும்பு ஆராய்ச்சி நிலையத் தலைவரும் பேராசிரியருமான எம்.எல். மனோகரன், வேளாண் துறை உதவி இயக்குநர்கள் ஆர். பாண்டியராஜன் (மணிகண்டம்), எஸ். ராஜேஸ்வரன் (அந்தநல்லூர்), கல்லூரி முதல்வர் கு. கதிரேசன் ஆகியோர் பேசினர்.

மணிகண்டம், அந்தநல்லூர் வட்டார விவசாயிகள் கலந்து கொண்டனர்.

முன்னதாக, கல்லூரிப் பேராசிரியர் மு. ஷேக்தாவூத் வரவேற்றார். இப்கோ நிறுவன முதுநிலை மண்டல மேலாளர் ச. சான்பாஷா நன்றி கூறினார்.

## நெல் சாகுபடியில் பண்ணை இயந்திரங்கள் செயல்விளக்கம்

First Published : 02 Oct 2010 10:16:42 AM IST

திருவள்ளூர், அக் 1: திருவள்ளூரை அடுத்த திரூர் நெல் ஆராய்ச்சி நிலையம் மற்றும் கூட்டுறவுத்துறையினர் இணைந்து, விவசாயிகளுக்கான நெல் சாகுபடியில் பண்ணை இயந்திரங்கள் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாமை வியாழக்கிழமை நடத்தினர்.

÷நெல் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் கோவி.ராமசுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற, பயிற்சி முகாமில் திருவள்ளூர் மண்டல இணைப் பதிவாளர் அமல்தாஸ் முன்னிலை வகித்தார். துணைப் பதிவாளர் தமிழ்ச்செல்வி வரவேற்றார். இதில் திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்கத்தினர் உள்ளிட்ட ஏராளமானோருக்கு நெல் சாகுபடியில் இயந்திரங்கள் பயன்படுத்தும் முறை குறித்து செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

÷இந் நிகழ்ச்சியில் உதவி பேராசிரியர்கள் மகாதேவன், சுந்தரராஜன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். ஒன்றிய கூட்டுறவு அலுவலர் கோபிநாத் நன்றி கூறினார்.

## நெல் விலையை உயர்த்த விவசாயிகள் வலியுறுத்தல்

First Published : 01 Oct 2010 07:46:34 AM IST

திருவாரூர், செப். 30: நெல் விலையை உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

திருவாரூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் எம். சந்திரசேகரன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:

கோவிந்தராஜ்: அரசு ஊழியர்களுக்கு அவ்வப்போது அகவிலைப்படி உயர்வு செய்யப்படுவது போன்று, விவசாயிகளுக்கும் நெல் விலையை கட்டுபடியாகும் அளவுக்கு உயர்த்தி வழங்க வேண்டும். தொடக்க வேளாண்மை கூட்டுறவுச் சங்கங்களில் உரங்களை கையிருப்பு வைத்துக் கொள்ளாமல், அனைத்தையும் விவசாயிகளுக்கு விநியோகிக்க வேண்டும். வேளாண் விரிவாக்க மையங்களில் பூச்சிக்கொல்லி மருந்துகள் போதுமான அளவுக்கு இருப்பு வைத்து விவசாயிகளுக்கு வழங்க வேண்டும்.

ஜி. சேதுராமன்: அதம்பார் கிராமத்தில் மின் தட்டுப்பாடு அதிகமாக உள்ளது. எனவே, மின் மாற்றிகளை மாற்றி, பழுது நீக்க வேண்டும். வாய்க்கால்கள் தூர்ந்துவிட்டதால் ஆறுகளிலிருந்து வாய்க்கால்களுக்கு நீர் பாயவில்லை.

டி. சந்திரசேகரன்: வேளாண் பல்கலைக்கழகத்தில் வாங்கிய நெல் விதைகளில்கூட 15 முதல் 20 சதம் வரை கலப்பு விதைகள் உள்ளன. வெள்ளை அதம்பாரில் உள்ள நெல் உலர் களம் சேதமடைந்துள்ளது. இதை சீரமைக்க வேண்டும்.

ராமமூர்த்தி: பெரும்பண்ணையூர் கால்நடை மருந்தகத்தில் நிரந்தர மருத்துவர் நியமிக்க வேண்டும். இந்தப் பகுதியில் உள்ள தனியார் வங்கி விவசாயிகளுக்கு தேவையான கடன்களை வழங்குவதில்லை. கடன் வழங்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில், சேங்காலிபுரத்தில் உள்ள வங்கிக்கு எங்களது கிராமத்தை மாற்றம் செய்ய வேண்டும்.

பா. ராமையா: செல்வபுரம் வாய்க்கால் தூர்ந்துவிட்டது. இதனால், இப்பகுதியில் உள்ள விவசாய நிலங்கள் சாகுபடி செய்யப்படாமல் உள்ளன. இதை உடனடியாக இயந்திரம் மூலம் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பி.எஸ். மாசிலாமணி: கடந்த 2008-ல் ஏற்பட்ட நிஷா புயலில் பாதிக்கப்பட்ட மரைக்காகோரையாற்றில் உள்ள நேமம் வடிகால் பகுதியில் நிரந்தரத் தடுப்பு ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டு,

பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. இதை விரைந்து முடிக்க வேண்டும். நிபந்தனைகளைத் தளர்த்தி நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். தனியாரிடம் விற்பதால் 60 கிலோ மூட்டைக்கு ரூ. 100 வரை விவசாயிகளுக்கு இழப்பு ஏற்படுகிறது.

பி.ஆர். பாண்டியன்: முத்துப்பேட்டை - ஜாம்புவானோடை சாலையில் கோரையாற்றுப் பாலம் புதிதாகக் கட்டப்படவுள்ளது. அதிக மழை பெய்யும் காலங்களில் இந்த ஆற்றில் 11,000 கன அடி தண்ணீர் வரும். எனவே, இதைக் கருத்தில் கொண்டு தாற்காலிகப் பாலம் அமைக்கப்படுவதை தரை மட்டத்தைவிட உயர்த்திக் கட்ட வேண்டும்.

மின் தேவை அதிகமாகி விட்டதால், பல இடங்களில் மின் மாற்றிகள் பழுதாகின்றன. மின் மாற்றி தட்டுப்பாட்டைப் போக்கி, உடனடியாக மின் மாற்றிகளை தேவையான இடங்களில் பொருத்த வேண்டும்.

நெடுவை ராஜதுரை: தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் கடன் தள்ளுபடி பெற்ற விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்க மறுக்கின்றனர். பயிர் காப்பீட்டுத் திட்டத்தை அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் செயல்படுத்த வேண்டும்.

கூட்டத்தில் மேலும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பேசினர்.

## விவசாயப் பணிகள் மும்முரம்

First Published : 03 Oct 2010 11:04:22 AM IST

காரியாபட்டி, அக். 2: பருவமழை தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து விருதுநகர் மாவட்டம் முழுவதும் விவசாயப் பணிகள் மும்முரமாக நடைபெறுகிறது.

இந்த ஆண்டு பருவ மழை ஒரு மாதம் தாமதமாகத் துவங்கியுள்ளது. கடந்த 15 நாள்களாக அவ்வப்போது பெய்து வந்த மழை தற்போது தீவிரமடைந்து வருவதைத் தொடர்ந்து மாவட்டத்தில் விவசாயப் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது.

அருப்புக்கோட்டை, திருச்சுழி, காரியாபட்டி ஆகிய பகுதிகளில் மக்காச்சோளம், கம்பு, பயறு வகை விவசாயம் நடைபெற்று வருகிறது.

தொடர் மழை நெல் நடவுக்கு ஏற்ற நேரம் என்பதால், விவசாயிகள் நடவுப் பணிகளில் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். கண்மாய் பாசன விவசாயிகள் மழைநீர் வடிவதற்குள் விவசாயப் பணிகளை முடிக்க வேண்டும் என அவசரமாகப் பணிகளை செய்து வருகின்றனர். அதேபோல் கிணற்றுப் பாசன விவசாயிகள் மழையில் பணிகளை செய்தால் சிரமப்பட்டு நிலங்களுக்கு நீர் பாய்ச்ச வேண்டிய அவசியம் இல்லை எனக் கருதி அவர்களும் இச்சமயத்தை பயன்படுத்தி நடவுப் பணிகளை செய்து வருகின்றனர்.

இரு தரப்பு விவசாயிகளும் ஒரே நேரத்தில் பணிகளை துவக்கியுள்ளதால் கூலியாள்கள் கிடைப்பதிலும், உழவுக்கு டிராக்டர், மாடுகள் கிடைப்பதிலும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இந்த ஆண்டு விவசாயப் பணிகள் ஒரு மாதம் தாமதமாகத் துவக்கப்பட்டாலும் அமோக விளைச்சல் கிடைக்குமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## வேளாண் தொழிலாளர்களுக்கு இலவச மழைக்கோட்டு

First Published : 02 Oct 2010 10:24:09 AM IST

புதுச்சேரி, அக். 1: புதுச்சேரியில் குருவிநத்தம் தொகுதியைச் சேர்ந்த வேளாண் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டு வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

÷புதுச்சேரி சட்டப்பேரவைத் தலைவர் அலுவலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், பேரவைத் தலைவர் ஆர்.ராதாகிருஷ்ணன் கலந்து கொண்டு, பயனாளிகளுக்கு இலவச மழைக் கோட்டு வழங்கினார்.

÷குருவிநத்தம் தொகுதியில் மொத்தம் 3918 வேளாண் தொழிலாளர்களுக்கு இலவச மழைக் கோட்டு வழங்கப்படுகிறது.

வேளாண்மைத் துறை கூடுதல் இயக்குநர்கள் கல்யாணசுந்தரம், கிரிதரன், ரவிபிரகாசம் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

தினமலர்

நிறுவனர் : டி. வி. ராமசுப்பையர்

## வாழையில் மூடிகொத்து நோய் கட்டுப்படுத்த ஆலோசனை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,23:06 IST

கிள்ளை : சிதம்பரம் அடுத்த கீழ் அனுவம்பட்டில் வாழையில் மூடிகொத்து நோயை கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது. சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் துறை மாணவர்கள் கிராமத்தில் தங்கி பயிற்சி பெற்று வருகின்றனர். இதில் சிதம்பரம் அடுத்த கீழ் அனுவம்பட்டில் தங்கியுள்ள மாணவர்கள் விவசாயிகளிடம் நேரில் விளக்கங்களை கேட்டறிந்து தகவல்களை சேகரித்தனர். அதில் வாழையில் மூடிகொத்து நோய் கட்டுப்படுத்தும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

## எண்ணெய்வித்து பயிர்கள் மத்திய துணை இயக்குனர் ஆய்வு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,03:41 IST

கடலூர் : கடலூர் மாவட்டத்தில் எண்ணெய் வித்து பயிர்களை மத்திய வேளாண் துணை இயக்குநர் குருமுகி ஆய்வு செய்தார்.மத்திய அரசு எண்ணெய்வித்து துணை இயக்குனர் குருமுகி, சென்னை, வேளாண்மை இயக்குனரக வேளாண்

துணை இயக்குநர் பாலகிருஷ்ணன் ஆகியோர் கடலூர் மாவட்டத்தில் பயிர் செய் யப்பட்டு வரும் ஐசோபாம் திட்டம் குறித்த வயல் ஆய்வு மேற்கொண்டனர்.

இதில் பண்ருட்டியை அடுத்த பணப் பாக்கம் விவசாயி ஆறுமுகம், சிறுகிராமம் ராமகிருஷ்ணன் ஆகியோரின் எண்ணெய் பனை பயிர் செய்யப்பட்டுள்ள வயலை பார்வையிட்டார். மேலும் நெய்வேலியில் உள்ள மாநில எண்ணெய்வித்து பண்ணையில் மணிலா வி.ஆர்.ஐ-2 கருவிதை பண்ணை ஆகியவற்றை பார்வையிட்டார். ஆய்வின் போது மத்திய அரசு திட்ட வேளாண்மை துணை இயக்குனர் சந்திரமோகன், வேளாண்மை அலுவலர் விஷ் ணுராம் மேத்தி, பண்ருட்டி உதவி இயக்குனர் ஹரிதாஸ் உள்ளிட்ட அதிகாரிகள் பலர் உடன் இருந்தனர்.

### வாழை, மரவள்ளி பயிர்களுக்கு 50 சதம் மானியத்துடன் காப்பீடு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:46 IST

விழுப்புரம் : தேசிய வேளாண் காப் பீட்டு திட்டத்தின் கீழ்  வெங்காயம், மஞ்சள், வாழை மற்றும் மரவள் ளிக்கு 50 சதவீதம் அரசு மானியத்துடன் காப்பீடு செய்யப்படுவதாக தோட் டக்கலைத் துறை அறிவித்துள்ளது.

தோட்டக்கலை துணை இயக்குனர் பன்னீர்செல் வம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: விவசாயிகள் வெங்காயம், மஞ்சள், வாழை மற் றும் மரவள்ளி பயிர்கள் வெள்ளம், வறட்சி, பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குதல்களால் ஏற்படும் இழப்புகளை தடுக்க தேசிய வேளாண் திட்டத் தின் கீழ் பயிர் காப்பீடு செய்யலாம். வாழை, மரவள்ளி மற்றும் வெங்காயத்திற்கு குறைந்த பட்ச காப்பீடு தொகையான ஒரு லட்சம் ரூபாய்க்கு அரசு மானியம் 3,300 ரூபாயும், விவசாயிகளின் பங்குத் தொகையாக 3,300 ரூபாயும் செலுத்த வேண்டும். மஞ்சள் பயிருக்கு குறைந் தபட்சம் 2 லட்சம் ரூபாய் காப்பீடு தொகைக்கு அரசு மானியம் 5,000 ரூபாயும், விவசாயிகள் பங்கு தொகையாக 5,000 ரூபாயும் காப்பீடு செலுத்த வேண்டும். இத்திட்டத்தின் கீழ் வங்கி கடன் பெறாத சிறு,குறு விவசாயிகளுக்கு பிரிமிய தொகையில் 55 சதவீதம் மானியமும் மற்ற விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியமும் வழங்கப்படுகிறது. இது குறித்து தகவலறிய விரும்பும் விவசாயிகள் அந்தந்த வேளாண்மை விரிவாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

### பருவ மழையால் செழித்துள்ள மானாவாரி வேர்க்கடலை பயிர்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:46 IST

செஞ்சி : செஞ்சி பகுதியில் பயிரிட்டுள்ள மானாவாரி வேர்க்கடலை பயிர் சமீபத்தில் பெய்த பருவ மழையால் செழித்து வளர்ந்துள்ளது. விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகாவில் ஆண்டு தோறும் ஆகஸ்ட் மாத துவக்கத்தில் மானாவாரி வேர்கடலை சாகுபடி செய்வது வழக்கம். நெல் பயிருக்கு அடுத்து இப்பகுதி விவசாயிகள் அதிகளவில் வேர்க்கடலை சாகுபடி செய்கின்றனர். இந்த ஆண்டும் 20 ஆயிரம் ஏக்கர் அளவிற்கு மானாவாரி வேர்க்கடலை சாகுபடி செய்திருந்தனர். வேர்க்கடலை முளைத்த நாட்களில் சரியான மழை இல்லாமல் பயிர்கள் வதங்கின. கடந்த மாத மத்தியில் பெய்த கன

மழையால் வாடிய வேர் கடலை பயிர்கள் செழித்து வளர்ந்தன. கடந்த வாரம் முதல் பெய்து வரும் லேசான மழையால் வேர்க் கடலை பயிர்கள் மேலும் செழுமையாகியுள்ளன.

தற்போது வேர்க்கடலை பயிரில் பூக்கள் பூத்து, காய்பிடிக்க துவங்கி உள்ளது. அடுத்து ஒரு மாத காலத்தில் காய் எடுக்க தயாராகி விடும் என விவசாயிகள் தெரிவிக்கின்றனர். மானாவாரி வேர்க்கடலையுடன் ஊடு பயிராக உளுந்து, பச்சை பயறு, துவரை, மொச்சை பயிரிட் டுள்ளனர். இவை விற் பனை செய்யும் அளவிற்கு அதிகம் இல்லாமல் இருந் தாலும் விவசாயிகளின் ஆண்டு தேவைக்கு போதுமானதாக இருக்கும். வேர்க்கடலை அறுவடை நேரத்தில் கன மழை இல்லாமல் இருந்தால் இந்த ஆண்டு மானாவாரி வேர்க்கடலை பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு நல்ல லாபம் கிடைக்கும்.

### செம்மை நெல் சாகுபடி மாணவிகள் களப்பயிற்சி

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:43 IST

சங்கராபுரம் : சங்கராபுரம் அடுத்த வாணாபுரத்தில் கல்லூரி மாணவிகள் கிராமப்புற களப்பயிற்சி மேற்கொண்டனர். திருச்சி அன்பில் தர்மலிங்கம் வேளாண் கல்லூரி பேராசிரியர் நூர்ஜகான் தலைமையில் இறுதியாண்டு மாணவிகள் வேளாண் களப்பணி பயிற் சிக்காக வாணாபுரம் கிராமத்தில் முகாமிட்டுள்ளனர். நீர்வள, நிலவள திட்டத்தின்படி மேற்கொள்ளப் படுகின்ற சாகுபடி முறைகள் குறித்து விவசாயிகளிடம் மாணவிகள் அனந்தநாயகி, பானுபிரதா, ஜோஸ்பின் சோபியா, மேனகா, மேகலா, சந்தானமேரி உள்ளிட்ட குழுவினர் கேட்டறிந்தனர்.

### மானிய விலையில் மக்காச்சோள விதை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:29 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர் வட்டார விவசாயிகளுக்கு 50 சதவீத மானிய விலையில் மக்கா சோள விதைகள் வழங்கப்படுகிறது.

திருநாவலூர் வட்டார வேளாண்மை உதவி இயக் குனர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருநாவலூர் மற்றும் உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் மாற்றுப்பயிராக மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. இப் பகுதி விவசாயிகளை ஊக்குவிக் கும் வகையில் மானிய விலையில் மக்காசோள விதைகள் வழங்கப்படும். மத்திய அரசின் உதவியோடு செயல்படுத்தப்படும் விதை கிராம திட்டத் தில் 50 சதவீத மானியத்தில் பயனீர் வீரிய ஒட் டுரக மக்காச்சோள விதைகள் வழங்கப்படுகிறது.

### வேலூர் மாவட்டத்தில் விவசாயிகள் சுற்றுலா

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,04:08 IST

உளுந்தூர்பேட்டை : திருநாவலூர், உளுந்தூர்பேட்டை வட்டார விவசாயிகள் வேலூர் மாவட்டத்திற்கு சுற்றுலா சென்று வந்தனர்.திருநாவலூர் வட்டாரத்தில் வேளாண் தொழில் நுட்ப முகமை எனப்படும் ஆத்மா திட்டம் செயல் படுத்தப்படுகிறது.

மேலும் வரும் ராபி பருவத்தில் தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின் கீழ் துரிதப்படுத்தப்பட்ட பயறு பெருக்கத்திட்டத்தின் கீழ் 1,250 ஏக்கர் பரப்பில் உளுந்து பெருவிளக்கப் பண்ணை அமைக்கப்பட உள்ளது. இத் திட்டத் தின் கீழ் வேலூர் மாவட்டத்தில் திருப்பத் தூர், கந்திலி வட்டாரங்களில் துவரை பயிர் 5,925 ஏக்கரில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் செயல் விளக் கத்தை காண திருநாவலூர் மற்றும் உளுந் தூர் பேட்டை வட்டாரத்தில் இத்திட்டத்தில் பங்குபெற உள்ள 50 விவசாயிகள் சுற்றுலா சென்று பார்வையிட்டனர். துவரை தனிப் பயிராகவும், தேக்கு, மா, பருத்தி, தென்னை போன்ற பயிர்களில் ஊடு பயிராகவும் பயிரிட்டுள்ளதை பார்வையிட்டனர்.

### மேல்மலையனூர் ஒன்றியத்தில் மண் புழு உரம் தயாரித்தல் பயிற்சி

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,04:05 IST

செஞ்சி : மேல்மலையனூர் ஒன்றிய விவசாயிகளுக்கு மண்புழு உரம் தயாரித்தல் குறித்த பயிற்சி அளிக்கப் பட்டது.மேல்மலையனூர் ஒன்றியத்தை சேர்ந்த 50 முன்னோடி விவசாயிகளுக்கு செக்கடி குப்பம் கிராமத்தில் மண்புழு உரம் தயாரித்தல், இதன் பயன்கள், பயன்படுத்தும் முறை குறித்து பயிற்சி அளிக்கப் பட்டது. வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் விளக்கவுரையாற்றினார். கப்பலோட்டிய தமிழன் என்பவரது வயலில் துணை வேளாண்மை அலுவலர் சாந்தலட்சுமி மண்புழு உரம் தயாரிக்கும் முறையை செய்து காட்டினார். இதில் விவசாயிகளுக்கு மண்புழு தயாரிப்பு குறித்த கையேடு, ஊக்கத் தொகை வழங்கப்பட்டது. முகாம் ஏற்பாடுகளை வேளாண்மை உதவி அலுவலர்கள் கிருஷ்ணன், கிருஷ்ண மூர்த்தி, தமிழ் மணி, வெங்கடேசன், ரகுபதி, பராசக்தி செய்திருந்தனர். முன்னோடி விவசாயி ரவி நன்றி கூறினார்.

### இருந்தையில் பயறு பெருக்கு திட்டம்வேளாண் இணை இயக்குனர் ஆய்வு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,03:32 IST

உளுந்தூர்பேட்டை:திருநாவலூர் அருகே இருந்தை கிராமத்தில் பயறு பெருக்கு திட்டம் செயல்படுத்த உள்ளதை இணை இயக்குனர் ஆய்வு செய்தார்.திருநாவலூர் வட் டாரத்தில் மத்திய அரசு நிதியுதவியுடன் 1,250 ஏக்கர் பரப்பளவில் ராபி பருவத்தில் உளுந்து பயறு பெருக்கு திட்டம் செயல் படுத்தப்பட உள்ளது. இத் திட்டத்தின் கீழ் இருந்தை, நாச்சியார்பேட்டை, மேப் புலியூர், ஏ.குரும்பூர், பாதூர், சின்னக்குப்பம், செங்குறிச்சி ஆகிய கிராமங்களில் வம்பன்1, வம்பன் 4 ரகங்கள் பயிரிடப்பட உள்ளது. இந்த திட்டத் தில் பயனடைய உள்ள கிராமங்கள் தற்சமயம் கம்பு அறுவடை முடிந்து உளுந்து பயறுக்காக உழவு செய்யப் பட்டு வருகிறது.இத்திட்டம் செயல்படுத்த உள்ள இருந்தை கிராமத்தில் வேளாண் மை இணை இயக்குனர் ராமகிருஷ்ணன் ஆய்வு செய்தார். துணை இயக்குனர் அன்பழகன், உதவி இயக்குனர் ரவீந்திரன், வேளாண்மை அலுவ லர் கள் விஜயலட்சுமி, செல்வி, ஜெயகாந்தி ஆகி யோர் உடனிருந்தனர்.

### விரைவில் பழ மார்க்கெட் இடமாற்றம்:வியாபாரிகள் பொதுக்குழுவில் முடிவு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,03:13 IST

சேலம்: "மாநகரின் வளர்ச்சியால் நெரிசல், இடப்பற்றாக்குறையை போக்க பழ மார்க்கெட் இடத்தை மாற்றுவது' என, நேற்று நடந்த மாநகர மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் பொதுக்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டது.சேலம் சின்னக்கடை வீதியில் உள்ள மாநகர மாங்காய் மற்றும் பழ வியாபாரிகள் சங்க பொதுக்குழு கூட்டம், தலைவர் குப்புசாமி தலைமையில் நடந்தது. சங்க செயலாளர் உமாபதி வரவேற்றார்.

சின்னக்கடை வீதியில் ஏற்படும் கடும் நெரிசல் மற்றும் பழக்கடைகளுக்கு இடப்பற்றாக்குறை நிலவுகிறது. மாநகருக்குள் பழமண்டிகள் உள்ள இடத்திற்கு, லாரிகளின் மூலமாக சரக்குகள் கொண்டு வர சிரமம் ஏற்படுகிறது.அதனால் வெளிமாநிலம், மாவட்டத்தில் இருந்து பழவியாபாரிகள், சேலத்துக்கு பழங்களை அனுப்ப தயக்கம் காட்டுகின்றனர்.

இதை கருத்தில் கொண்டு, மாநகரை ஒட்டிய புறநகர் பகுதியில், பழ மண்டிக்கு வேவையான ஓர் பொதுவான இடத்தை தேர்வு செய்யவும், அதற்கான நடவடிக்கையை எடுக்கவும், சங்க உறுப்பினர்கள் ஒப்புதலுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.வரும் ஆயுதபூஜையை முன்னிட்டு, அக்டோபர் 14, 15, 16 ஆகிய தேதிகளில் வியாபாரம் செய்ய, லாரிகளில் வரும் பழங்களை நகர் பகுதியில் இறக்கிக்கொள்ள, போலீஸ் துறையிடம் அனுமதி கேட்பது, தற்போது பழமண்டி அமைந்துள்ள இடத்தில் காலையில் குப்பைகளை கண்டபடி கொட்டாமல், அதற்கென வைக்கப்படும் டிரம்களில் கொட்டி வைத்து, சுகாதாரத்தை பேணிக்காப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.சங்க துணைத்தலைவர்கள் பிரபாகரன், சுந்தரம் பொருளாளர் லட்சுமணன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பம்புசெட் வழங்கும் திட்டம் ஒத்துழைக்க வேண்டுகோள்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:42 IST

நாமக்கல்: "தமிழக அரசு அறிவித்துள்ள திறன்மிகு மின் பம்புசெட் வழங்கும் திட்டத்துக்கு விவசாயிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்' என, தமிழ்நாடு மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் சச்சிதானந்தம் தெரிவித்துள்ளார்.அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:தமிழக அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு "திறன்மிகு மின் பம்புசெட் வழங்கும் திட்டத்தை' அறிவித்துள்ளது. இத்திட்டம் முழுமையாக வெற்றி பெற்று மின் இழப்பை குறைப்பதற்கு விவசாயிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.திறன்மிகு மின் பம்புசெட் பொருத்தப்பட்டவுடன், தற்போது விவசாய மின் இணைப்பு உள்ள மின் பம்புசெட்டை, இத்திட்டத்தை அமல்படுத்த நியமிக்கப்படும் மின் சேமிப்பு குழுமத்துக்கு (இ.எஸ்.சி.ஓ.,) திருப்பித்தர வேண்டும்.அதனால், ஏற்படும் மின் சேமிப்பை அளவீடு செய்ய, மின் இணைப்பில் மின் அளவி பொருத்த மின் சேமிப்பு குழுமத்துக்கு அனுமதிக்கவேண்டும். மின் அளவி பொறுத்தப்படுவது மின் சேமிப்பை கண்டறிய மட்டுமே அன்றி, மின் கட்டணம் கணக்கீடு செய்து வசூல் செய்வதற்காக இல்லை. புதிதாக பொருத்தப்படும் திறன்மிகு பம்புசெட் ஐந்து ஆண்டுகள், சோதனை ஆய்வு முடியும்வரை இயக்கத்தில் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் விவசாயிகள் இணைந்து நாட்டின் மின் பற்றாக்குறையை ஈடு செய்ய முன்வர வேண்டும்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### நெல் விவசாயிகளுக்குமானிய விலையில்களைக்கருவி விற்பனை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:30 IST

ராசிபுரம்: "நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்கு மானிய விலையில் களைக்கருவி வழங்கப்படுகிறது' என, எலச்சிபாளையம் வேளாண் உதவி இயக்குனர் லோகநாதபிரகாசம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:எலச்சிபாளையம் சுற்று வட்டாரத்தில் பருவ மழையை பயன்படுத்தி விவசாயிகள் அதிகளவில் நெல் பயிரிட்டுள்ளனர். நெல் பயிரிட்டுள்ள விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ், நடப்பு ஆண்டில் மார்க்கர் மற்றும் கோனோ களைக்கருவி மானிய விலையில் வினியோகம் செய்யப்படுகிறது.குறைந்த செலவில் அதிக மகசூல் பெற, நெல் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மார்க்கர் மற்றும் கோனோ களைக்கருவிகளை கொண்டு களை எடுக்கலாம். மேலும், "ராஜராஜன் 1,000' சாகுபடி முறைகளை முழுவதும் கடைபிடிக்க வேண்டும்.10 ஹெக்டேர் பரப்பளவு நெல் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மட்டுமே மானிய விலையில் வழங்கப்படும். மேலும் விபரங்களுக்கு எலச்சிபாளையம் வேளாண் அலுவலகத்தில் தொடர்பு கொள்ளலாம்.இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### தொழில்நுட்பம் மூலம் துவரை உற்பத்தி அதிகரிப்பு:இணை இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,03:06 IST

நாமக்கல்: "துவரைப் பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்க தொழில் நுட்பங்களை பயன்படுத்த வேண்டும்' என, கோவை விதைச் சான்றுத் துறை இணை இயக்குனர் செல்வம் தெரிவித்தார்.தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பயிறு உற்பத்தினையும், உற்பத்தி திØ யும் பெருக்கும் நோக்கத்தில் துவரை பயிரில் "ஐசிபிஎல் 85063' ரகத்தில் விதைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளன.

திருச்செங்கோடு வட்டாரத்தில் வரகூராம்பட்டி கிராமத்தில் பழனிசாமி என்பவர் இரண்டு ஏக்கர் பரப்பில் "ஐசிபிஎல் 85063' என்ற ரக துவரை விதைப்பண்ணை அமைத்துள்ளார். அவை தற்போது வளர்ச்சி பருவத்தில் உளளது.அந்த வயலை கோவை விதை சான்றுத் துறை இணை இயக்குனர் செல்வம், நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது, "பயிறு வகை உற்பத்தியில் தன்னிறைவு பெற, துவரைப் பயிரில் உற்பத்தித் திறனை அதிகரிக்க வேண்டும். அதற்கு தொழில் நுட்பங்களையும் சான்று விதை உற்பத்தி நுட்பங்களையும் முழுமையாக பின்பற்ற வேண்டும்' என, இணை இயக்குனர் செல்வம் அறிவுறுத்தினார்.கோவை விதை ஆய்வு இணை இயக்குனர் கோபால், நாமக்கல் விதைச் சான்று உதவி இயக்குனர் சுப்ரமணியம், விதைச் சான்று அலுவலர் முருகேசன், உதவி விதை அலுவலர் ராமசாமி உட்பட பலர் உடனிருந்தனர்.

### சேதாரம் இல்லாத கொப்பரைக்கு நல்ல விலைதுணை இயக்குனர் தகவல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,03:03 IST

நாமக்கல்: "தேங்காயை இரு துண்டுகளாக உடைத்து அதிலிருந்து சேதாரம் இல்லாமல் பெறப்பட்டு உலர வைக்கும் கொப்பரைக்கே நல்ல மதிப்பும், விலையும் கிடைக்க வாய்ப்புள்ளது' என, நாமக்கல் வேளாண் வணிக துணை இயக்குனர் சௌந்திரராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழகத்தில் 10 லட்சம் ஏக்கரில் பயிரிடப்படும் தென்னை, இந்தியாவின் தென்னை விவசாய மொத்த பரப்பில் 21 சதவீதத்தை கொண்டுள்ளது. அதன்படி 536 கோடி காய்கள் கிடைத்து, நாட்டின் உற்பத்தியில் ஒரு பங்கைக் கொண்டுள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் 2,750 ஹெக்டேர் பரப்பில் காய்க்கும் தென்னை மரங்களை கொண்டு தமிழ்நாட்டின் சராசரியை விட அதிகமான காய்கள் உற்பத்தி செய்யும் பகுதியாக விளங்குகிறது.நம் மாவட்டத்தின் தென்னை காய்கள் தரம் மிகுந்து விளங்குகிறது. எனவே மும்பை, போபால் மற்றும் டில்லி ஆகிய மாநிலங்களில் சமையலுக்காக வியாபாரிகளால் தோப்புகளில் இருந்து நேரடியாக தேங்காய் கொள்முதல் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது.

எனினும், மொத்த உற்பத்தியில் 30 சதவீதத்தை எண்ணெய் கொப்பரைக்காக உற்பத்தி செய்யப்படுவதால் நல்ல தரமுள்ள கொப்பரைகளாக உற்பத்தி செய்ய வேண்டியது ஒவ்வொரு தென்னை விவசாயின் கடமையாகும்.இதற்கு நல்லஅறுவடை பின் செய் நேர்த்தி முறைகளும் தரம் பிரித்தல் முறையும் இன்றியமையாதாகும். நல்ல தரமுள்ள கொப்பரை தேங்காய்களை பெற தொழு உரம், பேரூட்டச் சத்துக்கள் மற்றும் நுண் சத்துக்கள் குறிப்பாக போரான் இட வேண்டியது அவசியமாகும். போதிய அளவு நீர் பாய்ச்சுதலால் உற்பத்தியும் தரமும் கடுமையாக பாதிக்கப்படும். இந்திய அரசின் ஆதார விலைக் கொள்முதல் மூலம் செய்யப்படும் கொப்பரை, சராசரி தரத்திலேயே கொள்முதல் செய்யப்படுகிறது.ஜூன் முதல் டிசம்பர் வரை உற்பத்தியாகும் கொப்பரைகள் நல்ல வெயிலில் காய வைத்து, அதற்கு ஏற்ற கால சூழ்நிலை இல்லாததால் பெரும்பாலும் எவ்வளவு பின் நேர்த்தி மேற்கொணடாலும் இரண்டாம் தரம் மட்டுமே கிடைக்கும். அந்த இரண்டாம் தரம் ஃபேக் கொள்முதல் தரமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி முதல் மே மாதம் வரை நல்ல வெயில் சூழ்நிலை உள்ளதால் அச்சமயத்தில் ஃபேக் கொள்முதல் முதல் தரமாக அறிவிக்கப்பட வாய்ப்புள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் சிறு சிறு துண்டுகளாக உடைந்து கொப்பரை உற்பத்தி செய்யப்படுகிறது. நடைமுறை வழக்கம் காரணமாக பூஞ்சானம், நுண்ணுயிர்கள் தாக்குகிறது. தவிர, தூசுகள் அந்த பொருட்களில் கலந்து தரம் குறைத்து, குறைந்த விலையிலேயே கிடைக்கும் நிலை உள்ளது.ஆனால், தேங்காயை இரு துண்டுகளாக உடைத்து அதிலிருந்து சேதாரம் இல்லாமல் பெறப்பட்டு உலர வைக்கும் கொப்பரைக்கே நல்ல மதிப்பும், விலையும் கிடைக்க வாய்ப்புள்ளது.

எனவே தரமான கொப்பரைகளை உற்பத்தி செய்வதால் தான் வெள்ளி தோறும் திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க மல்லசமுத்திரம் கிளையில் டான்பெட் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படும் திட்டத்தில் பயனடைய முடியும். ஆதார விலைக் கொள்முதல் திட்டத்தில் இரண்டாம் தர முடிய உள்ள கொப்பரைக்கு 4,450 ரூபாய் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.மாவட்ட தென்னை விவசாயிகள் வேளாண் துறை மூலம் வழங்கப்படும் அடையாள அட்டை கிடைக்கப் பெற்று உரிய தரத்துடன் கொப்பரைகளைக் கொண்டு வந்து நல்ல விலை பெற்று பயனடையலாம்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உழவர் சந்தை பணிக்கு இன்று பூமி பூஜை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,02:56 IST

ஓசூர்: ஓசூர் ஆவலப்பள்ளியில் உழவர்சந்தை பணிக்கு இன்று (அக்., 3) பூமி பூஜை நடக்கிறது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஓசூர் தாலுகாவில் அதிகளவு காய்கறிகள் உற்பத்தியாகிறது. ஓசூர் பகுதியில் மட்டும் 10,000 ஏக்கரில் காய்கறிகள் சாகுபடி நடக்கிறது. விவசாயிகள் தினம் உற்பத்தியாகும் காய்கறிகளை ஓசூர் உழவர்சந்தைக்கு கொண்டு வந்து விற்பனை செய்து வருகின்றனர். தமிழகத்தில் ஓசூர் உழவர்சந்தை கோவைக்கு அடுத்தப்படியாக இரண்டாம் இடத்தில் செயல்படுகிறது. தினம் 150 டன்னுக்கு மேல் காய்கறிகளை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு ஓசூர் ஆவலப்பள்ளியில் உழவர்சந்தை அமைக்க மாவட்ட வேளாண் துறை நடவடிக்கை எடுத்தது. அதன்படி, ஆவலப்பள்ளியில் இன்று உழவர்சந்தை அமைக்க பூமி பூஜை விழா நடக்கிறது.

கலெக்டர் அருண்ராய் கட்டுமான பணியை துவக்கி வைக்கிறார். மாவட்ட வேளாண் விற்பனை குழு தலைவர் கோவிந்தசாமி, ஓசூர் எம்.எல்.ஏ., கோபிநாத், முன்னாள் எம்.எல்.ஏ., மனோகரன், தி.மு.க., நகர செயலாளர் விஜயகுமார், ஓசூர் நகராட்சி தலைவர் சத்யா, துணை தலைவர் மாதேஸ்வரன், ஓசூர் வேளாண் துறை உதவி இயக்குனர் நாகராஜ் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

## பயிறு சாகுபடிக்கு மானிய விலை டி.ஏ.பி., உரம்: வேளாண் அதிகாரி தகவல்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:14 IST

கிருஷ்ணகிரி: "கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பயறு வகை சாகுபடி செய்துள்ள விசாயிகளுக்கு மானிய விலையில் டி.ஏ.பி., உரம் வழங்க தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் 39 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது' என வேளாண் இணை இயக்குனர் ராஜன் தெரிவித்துள்ளார்.இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 66 ஆயிரத்து 900 ஹெக்டேரில் ஆண்டுதோறும் பயறு வகை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு ஆண்டு இதுவரை 48 ஆயிரத்து 361 ஹெக்டேரில் துவரை, உளுந்து, காராமணி, பச்சைபயிறு மற்றும் மொச்சை ஆகிய பயிறுவகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இவை தனிப்பயிராகவும், நிலக்கடலை, ராகி, தென்னந்தோப்பு மற்றும் மா ஆகிய பயிர்களில் ஊடுபயிராகவும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நெல் உள்ளிட்ட மானாவாரி பயிர்களுக்கு முக்கியத்தும் கொடுத்து உயிர் உரங்கள் மற்றும் உரங்கள் இடுவது போல மானாவாரி பயிறுவகைகளுக்கு விவசாயிகளுக்கு உரம் போடுவதில்லை. இதனால் மானாவாரி பயறு வகைகள் குறைவாக மகசூல் கொடுக்கின்றன. தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரை மற்றும் அனைத்து பயறுவகைகளும் பூ பூக்கும் பருவத்தில் உள்ளது. இந்த நேரத்தில் டி.ஏ.பி., உரத்தினை இலை வழியாக தெளிப்பதன் மூலம் பயறுவகைகளில் 10 முதல் 15 சத மகசூலினை அதிகரிக்கலாம். இதற்காக தற்போது மானிய விலையில் வட்டார வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் மானிய விலை டி.ஏ.பி., உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறது. பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி., உரத்தினை பூ பிடிக்கும் பருவத்தில் ஒரு முறையும், 15 நாள் கழித்து மறு முறையும் இலை வழியாக தெளிப்பதால் பூக்களின் எண்ணிக்கை அதிகரிக்கிறது.பூ உதிர்வது குறைவதால் காய் பிடிப்பது அதிகரிக்கப்படுகிறது. திரட்சியான விதைகள் உருவாக ஏதுவாகிறது. இதனால், ஏக்கருக்கு 300 கிலோவில் இருந்து 400 கிலோ வரை மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. ஏக்கருக்கு 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்கிறது. பயறுவகை சாகுபடியை ஊக்குவிக்கவும், பயறு உற்பத்தியை அதிகரிக்கவும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 15, 824 ஹெக்டேரில், ஹெக்டேருக்கு 250 ரூபாய் வீதம் மொத்தம் 39 லட்சத்து 56 ஆயிரம்

ரூபாய் மானியம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.ஒரு முறை தெளிப்பதற்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ வீதம் இருமுறை தெளிப்பதற்கு 25 கிலோ டி.ஏ.பி., வேளாண் துறை மூலம் தற்போது வழங்கப்படுகிறது.இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### புதிய உழவர் சந்தை கட்டுமானப்பணி : கலெக்டர் துவக்கி வைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:11 IST

ஓசூர்: ஓசூர் அடுத்த ஆவலப்பள்ளி ஹட்கோவில் இரண்டாவது புதிய உழவர் சந்தை அமைக்க கலெக்டர் அருண்ராய் கட்டுமான பணியை துவக்கி வைத்தார்.ஓசூர் தாலுகா ஆஃபீஸ் அருகே உள்ள உழவர்சந்தையில் விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் வரத்து அதிகமானதால், கடும் இடநெருக்கெடி ஏற்பட்டுள்ளது. இதனால், ஓசூர் ஆவலப்பள்ளி ஹட்கோவில் இரண்டாவதாக புதிய உழவர்சந்தை அமைக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுத்தது. அதன்படி நேற்று ஆவலப்பள்ளி ஹட்கோவில் புதிய உழவர்சந்தை அமைப்பதற்கான பூமி பூஜை விழா நடந்தது. கலெக்டர் அருண்ராய் தலைமை வகித்து, புதிய உழவர் சந்தை அமைப்பதற்கான கட்டுமான பணியை துவக்கி வைத்தார்.ஓசூர் காங்கிரஸ் எம்.எல்.ஏ., கோபிநாத், மாவட்ட வேளாண் விற்பனை குழு தலைரவ் கோவிந்தசாமி, சப்-கலெக்டர் பிரசாந்த் முகுந்த் வாட்நர், நகராட்சி துணை தலைவர் மாதேஸ்வரன், தி.மு.க., நகர செயலாளர் விஜயகுமார், முன்னாள் நகராட்சி தலைவர் குருசாமி, மாவட்ட வேளாண்மை இயக்குனர் ராஜன், ஓசூர் வேளாண்மை உதவி இயக்குனர் நாகராஜ், வேளாண் விற்பனை துறை உதவி இயக்குனர் லட்சுமிராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.விழாவில் கலெக்டர் அருண்ராயிடம், எம்.எல்.ஏ., கோபிநாத், "புதிய உழவர்சந்தை அமைக்கப்படும் இடத்தில் வெறும் 35 செண்ட் இடம் மட்டும் உள்ளது. மேலும், இங்கு ஒரு வழிச்சாலை மட்டும் உள்ளதால் கடும் இடநெருக்கெடி ஏற்படும் வாய்ப்பு உள்ளது. யார் பரிந்துரை பேரில் இங்கு உழவர்சந்தை அமைக்கிறீர்கள்' என்று தனது அதிருப்தியை வெளியிட்டார். கலெக்டர் அருண்ராய், வேளாண் அதிகாரிகளை கைகாட்டி சமாளித்தார். இதனால், அங்கு திடீர் பரபரப்பு ஏற்பட்டது

### விவசாயிகள் சங்க வட்டக்குழு கூட்டம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,01:53 IST

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க வட்டக்குழு கூட்டம் நடந்தது.மாவட்ட செயலாளர் கண்ணு தலைமை வகித்தார். துணை செயலாளர் சிவாஜி முன்னிலை வகித்தார். மாநில குழு உறுப்பினர் கெம்பன் வரவேற்றார். மாநில துணை தலைவர் லகுமையா கோரிக்கைகள் குறித்து பேசினார்."மார்கண்டேய நதியின் தடுப்பணையை உயர்த்தி படேதலாவ் ஏரிக்கு தண்ணீர் விட வேண்டும். விவசாய பயிர்களை நாசமாக்கும் காட்டுபன்றிகளை அழிக்க உத்தரவிடவேண்டும், விவாயிகளுக்கு தங்கு தடையின்றி மின்சாரம் வழங்க வேண்டும்' உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றினர்.மாநில குழு உறுப்பினர் கிருஷ்ணப்பா, மாவட்ட குழு உறுப்பினர்கள் நாராயணன், மாரப்பன், சிவநாதன், சுபத்திரம்மாள், கிருஷ்ணமூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர். தேவிகா நன்றி கூறினார்.

### வாழைத்தார்வரத்து அதிகரிப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:22 IST

கோபிசெட்டிபாளையம்: கோபி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் 7,000 வாழைத்தார் ஆறு லட்சத்து 75 ஆயிரம் ரூபாய் மதிப்பில் விற்றது.* கதளி கிலோ ஒன்றுக்கு 17 ரூபாய், நேந்திரம் 20 ரூபாய், செவ்வாழை தார் ஒன்று 430 ரூபாய், ரோபஸ்போ 250 ரூபாய், தேன் வாழை 340 ரூபாய், பச்சைநாடா 225 ரூபாய், மொந்தன் 200 ரூபாய், ரஸ்தாளி 353 க்கும் ரூபாய்க்கு விற்றது.* தேங்காய் 7,000 காய்கள் விற்பனைக்கு வந்தது. அதிகப்பட்சமாக தேங்காய் ஒன்றுக்கு எட்டு ரூபாய்க்கும், குறைந்தப்பட்சமாக மூன்றரை ரூபாய்க்கும் விற்றது. 29 ஆயிரம் ரூபாய் மதிப்பில் தேங்காய் வர்த்தகம் நடந்தது.

### வேளாண்மை தொழில்நிர்வாக குழு கூட்டம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:19 IST

ஈரோடு: ஈரோட்டில் மாவட்ட அளவிலான வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில், நிர்வாக குழு கூட்டம் நடந்தது.திட்ட இயக்குனர் மோகன் தலைமை வகித்தார். வேளாண் துணை இயக்குனர் மாரியப்பன் வரவேற்றார். இதில் வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம், வேளாண் வணிகம், கூட்டுறவு, வேளாண் பல்கலை, அக்காஸ் மைராடா துறைகளை சேர்ந்தோர் மற்றும் விவசாய பிரதிநிதி கருப்பசாமி உட்பட பலர் பங்கேற்றனர்.நவம்பரில் அனைத்து துறைகளும் இணைந்து மாவட்ட அளவில் விவசாய கண்காட்சி நடத்தவும், அதிகளவு விவசாயிகள் பங்கேற்க வேண்டுமெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 2010-2011 ம் ஆண்டுக்கான ஆத்மா செயல்திட்டம் தயாரிக்கப்பட்டதை விவாதிக்கப்பட்டது.இத்தகவலை திட்ட இயக்குனர் மோகன் தெரிவித்தார்.

### விவசாய மேம்பாட்டுக்கு முக்கியத்துவம் கொடுத்தால் நாடு வளம் பெறும்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,00:17 IST

கோவை: ""விவசாய மேம்பாட்டுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் நாடு வளம் பெறும்,'' என, ஆந்திர மாநில வேளாண் துறை அமைச்சர் ரகுவீரா ரெட்டி பேசினார். "அக்ரி இன்டெக்ஸ் 2010' விவசாய கண்காட்சி நிறைவு விழா, கோவை கொடிசியா தொழிற்காட்சி வளாகத்தில் நேற்று நடந்தது. "கொடிசியா' தலைவர் கந்தசாமி வரவேற்றார். ஆந்திர மாநில வேளாண்துறை அமைச்சர் ரகுவீராரெட்டி பேசியதாவது: கோவையில் நடைபெறும் விவசாய கண்காட்சிக்கு, அமைச்சராக வரவில்லை. விவசாயியாகவே வந்துள்ளேன். கொடிசியா சார்பில் நடத்தப்படும் பத்தாவது விவசாய கண்காட்சியில் 2 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் வருகை தந்துள்ளது வியப்பாக உள்ளது; விவசாயத்துறை முன்னேற்றத்துக்கு உதவும். விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள் கொண்டிருக்கும் சந்தேகங்களை தெளிவுபடுத்த இக்கண்காட்சி உதவுகிறது. விவசாயத்தை மேம்படுத்தும் வகையில் இதுபோன்ற கண்காட்சிகள் அனைத்து பகுதிகளிலும் அதிகளவில்

நடத்தப்பட வேண்டும். விவசாயிகள் மேம்பாடுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் நாடு வளம் பெறும். மறைந்த சி.சுப்பிரமணியம் உள்பட பலர் விவசாயத்துறையில் பசுமை புரட்சி ஏற்படுத்த பாடுபட்டனர். சுதந்திரத்துக்கு முன் நாட்டில் மக்கள்தொகை 30 கோடியாக இருந்த போது உணவு பஞ்சம் ஏற்பட்டது. தற்போது 110 கோடியை தாண்டிய போதும் உணவு பஞ்சம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விவசாயிகளுக்கே இப்பெருமை அனைத்தும் சேரும். அதிகரித்து வரும் மக்கள்தொகைக்கேற்ப உணவு பொருட்கள் உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியம்; இதுதான் அனைத்து பிரச்னைக்கும் தீர்வாக அமையும். நாட்டின் பாதுகாப்பில் உணவு பொருட்கள் உற்பத்தி முக்கிய பங்கு வகிக்கிறது. உணவு பொருட்கள் உற்பத்தியில் பற்றாக்குறை ஏற்படாத வரை சர்வதேச நாடுகள் குறித்து கவலை கொள்ள தேவையில்லை. தற்போது நாட்டில் உற்பத்தியாகும் உணவு பொருட்களில் 30 சதவீதம், போக்குவரத்து, சேமிப்பு உள்பட பல்வேறு காரணங்களால் வீணாக்கப்படுகிறது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து திட்டம் வகுத்து செயல்படுவதன் மூலம், உணவுப் பொருட்கள் வீணாவதை 5 முதல் 10 சதவீதமாக குறைக்க முடியும். இவ்வாறு, அவர் பேசினார். கோவை வேளாண் பல்கலை துணைவேந்தர் முருகேச பூபதி பேசுகையில், ""நாட்டில் உற்பத்தியாகும் அரிசியில் புரோட்டீன் சத்து 7 முதல் 8 சதவீதமாக உள்ளது. ""இதை 12 முதல் 13 சதவீதமாக உயர்த்த வேளாண் விஞ்ஞானிகள் ஆராய்ச்சி மேற்கொண்டுள்ளனர். பி.டி., துறையில் சிறப்பாக செயல்படும் நிறுவனங்கள் குறித்து தேசிய அளவில் நடத்தப்பட்ட ஆய்வறிக்கையின் முடிவில் கோவை வேளாண் பல்கலை 6 வது இடம் பெற்றுள்ளது. மக்காச்சோளம் மற்றும் பருத்தி உற்பத்தியில் தரமான விதைகளை அதிகளவில் விவசாயிகள் பயன்படுத்துகின்றனர். எண்ணெய் விதைகள் மற்றும் பயறு வகைகள் உற்பத்தியில் தரமான விதைகளை பயன்படுத்துவதில்லை. இவ்வாறு, துணைவேந்தர் முருகேசபூபதி பேசினார். பெங்களூரு இந்திய வேளாண் ஆராய்ச்சி குழுமத்தின் மண்டல திட்ட இயக்குனர் பிரபுகுமார் பேசியதாவது: விவசாய கண்காட்சிகள் மூலம் விவசாயத்திலுள்ள நவீன தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகள் ஒரே கூரையின் கீழ், அனைத்து தகவல்களையும் பெற முடிகிறது; மேம்பாடுக்கு உதவுகிறது. மைசூரை அடுத்துள்ள சுத்தூர் பகுதியில், வரும் நவ., 12,13 ம் தேதிகளில் விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்தாய்வு நடக்கிறது. விவசாயத்திலுள்ள நவீன தொழில்நுட்பங்களுக்கென பிரத்யேக கண்காட்சி நடத்தப்பட வேண்டும். தமிழ்நாடு வேளாண் பல்கலை இணையதளத்திலுள்ள தகவல்கள், நாட்டிலுள்ள அனைத்து பகுதி விவசாயிகளுக்கும் உதவுவதாக உள்ளது. விவசாயத்தை மேம்படுத்த அரசுடன் இணைந்து தனியார் நிறுவனங்களும் அதிகளவில் விவசாய கண்காட்சிகளை நடத்த முன்வர வேண்டும். இவ்வாறு, பிரபுகுமார் பேசினார். மத்திய விவசாய அமைச்சகத்தின் கூடுதல் கமிஷனர் (விரிவாக்கப்பணி) மீனா, பேசுகையில், ""நாட்டில் விவசாயத்தை மேம்படுத்தவும், விவசாயிகளை ஊக்குவிக்கவும் கண்காட்சிகளை நடத்த மத்திய அரசு 6 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்கிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் விவசாய கண்காட்சிகளை நடத்துவது மூலம் விவசாயத்துறை நல்ல முன்னேற்றம் அடையும்," என்றார். கண்காட்சி முன்னிட்டு கல்லூரி மாணவர்களுக்கு நடத்தப்பட்ட கட்டுரை போட்டியில் வெற்றி பெற்றவர்கள், கண்காட்சியில் சிறந்த அரங்கு அமைத்த பொதுத்துறை நிறுவனங்கள், பெரிய தொழில் நிறுவனங்கள், சிறு தொழில் நிறுவனங்கள், பண்ணை பொருட்கள் உள்ளிட்ட பிரிவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களுக்கு பரிசு வழங்கப்பட்டது. "அக்ரி இன்டெக்ஸ் 2010' விவசாய கண்காட்சி தலைவர் சசிதரன், "கொடிசியா' கவுரவ செயலாளர் சுருளிவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

## தரமில்லாத விதையால் தக்காளி பாதிப்பு:ஏக்கருக்கு ரூ.35 ஆயிரம்; விவசாயிகளுக்கு இழப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:53 IST

பொள்ளாச்சி: பொள்ளாச்சி அருகே தரமில்லாத தக்காளி விதையை விதைப்பு செய்து நடவு செய்ததால் தக்காளி பருமனடையாமல் சிறுத்துப்போனது. இதனால் ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளது. பொள்ளாச்சி அடுத்த ஜமீன்காளியாபுரம் சுற்றுப்பகுதியில் 500 ஏக்கரில் தக்காளி சாகுபடி உள்ளது. தக்காளி செடிகளில் எப்போதும் போல் பூக்கள் வந்தாலும் காய்கள் பருமனடையாமல் சிறுத்து விடுவதாக விவசாயிகள் குமுறுகின்றனர். ஜமீன் காளியாபுரத்திலுள்ள தக்காளி விவசாயிகள் கூறியதாவது: பொள்ளாச்சியில் உள்ள அக்ரோ சென்டர் கடைகளில் ஆந்திராவிலுள்ள கோல்டன் சீட்ஸ் என்ற நிறுவனத்தின் தக்காளி விதைகளை வாங்கினோம். வீரிய ரக தக்காளியான 3006, 2082 ரகங்களை வாங்கி நடவு செய்தோம். தக்காளி சாகுபடி செய்து 60 நாட்கள் கடந்துள்ள நிலையில் எல்லா செடிகளிலும் வழக்கம் போல் பூப்பூக்கிறது. ஆனால், தக்காளி காய்கள் பருமனடையமால் சிறுத்துள்ளது. சுண்டக்காய் அளவுக்கு இருக்கும் தக்காளிக்காய் அப்படியே பழுத்து விடுகிறது. அவற்றை பறிக்காமல் விட்டால் உதிர்ந்தும் விடுகின்றன. சிறுத்திருக்கும் தக்காளி காய்கள் சிவந்ததும் அவற்றை பறித்து மார்க்கெட்டுக்கு கொண்டு சென்றால் வியாபாரிகள் வாங்க மறுக்கின்றனர். இந்த ரக தக்காளியை கொள்முதல் செய்தால் மறுபடியும் விற்க முடியாது என்று கூறி திருப்பி அனுப்பி விடுகின்றனர். விவசாயிகள் எப்போதும் வாங்கும் தக்காளி விதையை பயிரிட்டுள்ளோம். இந்தாண்டு விற்கப்பட்ட தக்காளி விதைகள் தரமில்லாததால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. தக்காளி விதை வாங்கியதற்கு பில் போன்ற ஆவணங்களை வைத்துள்ளோம். தக்காளி விதைப்பு, நடவு, உரமிடுதல், மருந்து தெளித்தல் போன்ற பணிகள் மேற்கொண்டதற்கு ஏக்கருக்கு 35 ஆயிரம் ரூபாய் செலவாகி உள்ளது. தக்காளி சாகுபடி செய்து ஏற்பட்ட இழப்பு தொகையை விதை நிறுவனத்திடம் பெற்றுக்கொடுக்க வேண்டும். இதுபற்றி பொள்ளாச்சி வேளாண்துறை மற்றும் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் புகார் செய்துள்ளோம். ஆனால், இதுவரை அதிகாரிகள் யாரும் களப்பகுதிக்கு வந்து ஆய்வு செய்யவில்லை. சிறு, குறு விவசாயிகளாக உள்ளதால் இந்த இழப்பை விவசாயிகளால் தாங்கிக்கொள்ள முடியாது. அதனால் மாவட்ட நிர்வாகம் இந்த பிரச்னையில் தலையிட்டு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர். தக்காளி பயிர் தோட்டக்கலைத்துறை தொடர்பானது என்பதால் வேளாண் துறை அதிகாரிகள் ஒதுங்கிக்கொண்டனர். தோட்டக்கலைத்துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, "விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை சார்பில் 5005 என்ற வீரிய ரக தக்காளி விதை மட்டுமே வழங்கப்பட்டது. தனியார் கடைகளில் விற்கப்படும் தக்காளி விதைகளை விவசாயிகள் வாங்கி பயிரிட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. அந்த விதைகள் தரமானவையா என்பதை விதைச்சான்று துறையினர் தான் ஆய்வு செய்ய வேண்டும். விவசாயிகளின் புகாரை ஏற்று ஜமீன்காளியாபுரத்தில் உள்ள தக்காளி செடிகளை வரும் 4 ம் தேதி தோட்டக்கலைத்துறை சார்பில் ஆய்வு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது' என்றனர்.

### கொப்பரை மார்க்கெட் திடீர் சரிவு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,04:05 IST

பொள்ளாச்சி : வெளிமார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி இருந்தாலும், திடீர் விலைச்சரிவு ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் மற்றும் கொப்பரை உற்பத்தியாளர்களிடையே குழப்பம் உருவாகியுள்ளது.

தமிழகத்தில் தேங்காய் வரத்தும்; கொப்பரை உற்பத்தியும் குறைந்துள்ளதால் மார்க்கெட்டில் கொப்பரைக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. இதனால் கொப்பரை, தேங்காய், தேங்காய் எண்ணெய் போன்றவற்றின் விலை உயர்ந்து வருகிறது.

காங்கேயம் மார்க்கெட்டில் கடந்த மாதம் 25 ம் தேதி நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 51 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,055 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 85 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது. பறித்து உரிக்கப்பட்ட தேங்காய் டன்னுக்கு 14,500 ரூபாயும் (பச்சை தேங்காய்), 16 ஆயிரம் ரூபாய் (காய்ந்த தேங்காய்) விலை கிடைத்தது. விவசாயிகள் பறித்து வைத்து தேங்காய் ஒன்றுக்கு ஒன்பது ரூபாயும், மரத்தில் இருந்து பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு எட்டு ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது.

காங்கேயம் மார்க்கெட்டில் நேற்றைய நிலவரப்படி, கொப்பரை கிலோவுக்கு 49 ரூபாய் விலை கிடைத்தது. தேங்காய் எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு 1,020 ரூபாயும், தேங்காய் பவுடர் கிலோவுக்கு 80 ரூபாயும் விலை நிர்ணயம் செய்யப் பட்டது. தோப்புகளில் பறித்து இருப்பு வைக்கப்பட்டுள்ள தேங்காய் ஒன்றுக்கு ஒன்பது ரூபாயும், மரத்தில் இருந்து பறித்து கொள்வதற்கு ஒரு தேங்காய்க்கு 7.50 ரூபாயும் விலை கொடுக்கப்பட்டது.

தொடர்ந்து ஏறுமுகத்தில் இருந்து கொப்பரை விலை, இரண்டு ரூபாய் குறைந்துள்ளதால் கொப்பரை உற்பத்தியாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

### விவசாயிகள், வியாபாரிகளை ஆட்டிப்படைக்கும் புண்ணாக்கு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,23:35 IST

திருப்பூர்: புண்ணாக்கு விலை உயர்வால் விற்பனை சரிவடைந்துள்ளது. விற்பனை சரிவால் வியாபாரிகளும், விலை உயர்வால் விவசாயிகளும் கவலை அடைந்துள்ளனர். கறவை மாடுகளுக்கு அளிக்கப்படும் தீவனங்களில் முக்கியமானது புண்ணாக்கு. கடந்த ஒரு மாதத்தில் தேங்காய், பருத்தி, கடலை புண்ணாக்கு விலை உயர்ந்துள்ளது. இதன் காரணமாக, விற்பனை அளவு மூன்று மடங்கு குறைந்தது. தேங்காய் புண்ணாக்கு மூட்டை 200 ரூபாய்; கடலை புண்ணாக்கு மூட்டைக்கு 500 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. விலை உயர்வு மாடு வளர்ப்போர் மற்றும் வியாபாரிகளை கவலை அடையச் செய்துள்ளது. விவசாயிகள் மற்றும் புண்ணாக்கு வியாபாரிகள் கூறியதாவது:
ஒவ்வொரு ஆண்டும் மழை காலம் துவங்கியதும் புண்ணாக்கு விலை அதிகரிக்கும். இந்தாண்டு கடந்த ஒரு மாதமாகவே விலை உயர்ந்து வருகிறது. கொப்பரை தேங்காய் விலை உயர்வு, நிலக்கடலை வரத்து குறைவு காரணம். ஏற்றுமதி ஆர்டர், லோக்கல் விளைச்சல் குறைவு என பருத்திக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. கடந்த 40 நாட்களில் தேங்காய் புண்ணாக்கு மூட்டைக்கு 200 ரூபாய் அதிகரித்து, மூட்டை 630 முதல் 1,060 ரூபாய் வரை விற்கிறது. பருத்திக்கொட்டை புண்ணாக்கு 100 முதல் 150 ரூபாய் வரை உயர்ந்து, மூட்டை 840 முதல் 870 ரூபாய் வரை விற்கிறது.கடலை புண்ணாக்கு 1,000 முதல் 1,200 ரூபாய் வரை விற்றது. தற்போது, மூட்டைக்கு 500 ரூபாய் உயர்ந்து, 1,700 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை அதிகரிப்பால், விற்பனை நான்கில் ஒரு பங்காக குறைந்துள்ளது. மாடுகளின் பால்வளத்தை அதிகரிப்பதில், புண்ணாக்கு முக்கிய பங்கு வகிக்கிறது. சொந்தமாக தீவனப்பயிர் செய்யும் விவசாயிகளால், விலை உயர்வை சமாளிக்க முடியும். விவசாயம் சாராமல் மாடு வளர்ப்பு மட்டும் செய்யும் நபர்களுக்கு, கடுமையான பாதிப்பு ஏற்படுத்தும். ஒரு லிட்டர் பாலை, பால்காரர் 13

ரூபாய், சொசைட்டிகளில் சராசரியாக 14 ரூபாய் வரை வாங்கப்படுகிறது. இது, போதுமான விலை இல்லை; ஒரு லிட்டர் பால் 20 ரூபாய்க்கு விற்றால் மட்டுமே, புண்ணாக்கு விலை உயர்வை சமாளிக்க முடியும், என்றனர்.

### மரக்கன்றுகள் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,23:23 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறையினர் சார்பாக உயர்ரக வீரிய மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன. 5 அடி இடைவெளியில் நடப்படும் மா, 8 அடி இடைவெளியில் நடப்படும் நெல்லி மரக்கன்றுகள் மற்றும் உரங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. ரூ. 40 மதிப்புள்ள 400 "மா' மரக்கன்றுகளும், இயற்கை உரங்கள் மற்றும் இடுபொருட்களுடன் வழங்கபடுகிறது. இவற்றின் மதிப்பு ரூ.24 ஆயிரம். மேலும் ரூ. 10 ,500 மதிப்புள்ள நெல்லி மரக் கன்றுகள் மற்றும் உரங்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. தேவைப்படும் விவசாயிகள், வருவாய்த்துறையினர் வழங்கும் சிட்டா, நிலஉரிமை சான்று, இரண்டு புகைப்படத்துடன் மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் தங்கள் பெயர் மற்றும் தேவைப்படும் மரக்கன்றுகள் குறித்து விபரங்களை பதிவு செய்யலாம். மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் தொடங்கிய திட்டம். இதில் பதிவு செய்த விவசாயிகளுக்கு தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அடுத்த வாரங்களில் இலவச மரக்கன்றுகள் மற்றும் விவசாய இடு பொருட்களும் இலவசமாக வழங்கப்படும் என்றார்.

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,23:23 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறையினர் சார்பாக உயர்ரக வீரிய மரக்கன்றுகள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் பயன்பெறும் வகையில் இலவச மரக்கன்றுகள் வழங்கப்பட உள்ளன. 5 அடி இடைவெளியில் நடப்படும் மா, 8 அடி இடைவெளியில் நடப்படும் நெல்லி மரக்கன்றுகள் மற்றும் உரங்கள் இலவசமாக வழங்கப்படுகிறது. ரூ. 40 மதிப்புள்ள 400 "மா' மரக்கன்றுகளும், இயற்கை உரங்கள் மற்றும் இடுபொருட்களுடன் வழங்கபடுகிறது. இவற்றின் மதிப்பு ரூ.24 ஆயிரம். மேலும் ரூ. 10 ,500 மதிப்புள்ள நெல்லி மரக் கன்றுகள் மற்றும் உரங்கள் இலவசமாக வழங்கப்பட உள்ளன. தேவைப்படும் விவசாயிகள், வருவாய்த்துறையினர் வழங்கும் சிட்டா, நிலஉரிமை சான்று, இரண்டு புகைப்படத்துடன் மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் தங்கள் பெயர் மற்றும் தேவைப்படும் மரக்கன்றுகள் குறித்து விபரங்களை பதிவு செய்யலாம். மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறையினர் கூறியதாவது: விவசாயிகள் பயனடைய வேண்டும் என்ற நோக்கில் தொடங்கிய திட்டம். இதில் பதிவு செய்த விவசாயிகளுக்கு தகுதியின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு, அடுத்த வாரங்களில் இலவச மரக்கன்றுகள் மற்றும் விவசாய இடு பொருட்களும் இலவசமாக வழங்கப்படும் என்றார்.

## மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிர் பாதுகாப்பு மையம் திறப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,23:21 IST

உடுமலை: உடுமலை அருகே அடிவள்ளி கிராமத்தில், மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனத்தின் பயிர் பாதுகாப்பு மையம் திறப்பு விழா நடந்தது. கோவை மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவனம் சார்பில், டி.எம்.சி., மினி மிஷன் திட்டத்தில், பூச்சி கொல்லி எதிர்ப்பு மேலாண்மை திட்டம் குடிமங்கலம் வட்டாரத்தில் 15 கிராமங்களில் செயல்படுத் தப்படுகிறது. திட்டத்தின் கீழ் பருத்தி பயிர் பாதுகாப்பு மையம் அடிவள்ளி கிராமத்தில் திறக்கப்பட்டுள்ளது. திட்ட ஒருங்கிணைப் பாளர் கோபாலகிருஷ்ணன் மையத்தை திறந்து வைத் தார். தொடர்ந்து நடந்த கருத்தரங்கில், அமுதா வரவேற்றார். பொறுப்பாளர் தாராஜோதி, பூச்சியியல் தலைவர் சுருளிவேலு, வேளாண் உதவி இயக்குநர் சைலஸ் ஆகியோர் பேசினர். பருத்தி பயிர் பாதுகாப்பு மையத்தில் பருத்தியை தாக்கும் பூச்சிகள், அவற்றின் புகைப்படங்கள், தாக்கப்பட்ட செடிகள், உயிருள்ள புழுக் கள் விவசாயிகள் பார்வைக்காக வைக்கப் பட்டுள்ளது. திட்ட உதவியாளர்கள் மையத்திற்கு வரும் விவசாயிகளின் சந்தேகத்திற்கு விடையளித்து உதவுவார்கள் என மத்திய பருத்தி ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மானிய விலையில் விவசாயிகளுக்கு விதைகள்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:46 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்லைத்துறையினர் சார்பாக மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகிறது. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் பயன்படும் வகையில் தோட்டக்லைத் துறையினர் சார்பாக 50 சதவீத மானியவிலையில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன. 10 கிராம் வெண்டைக்காய் விதை ரூ.90 க்கு விற்பனை செய்யப்படுவது ரூ.45 க்கும், 250 கிராம் கத்தரிவிதை ரூ.280 க்கு விற்பனை செய்யப்படுவது ரூ.140 க்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் அரசு வழங்கும் மானியத்தில் பயன்பெறவும், அதிக மகசூல் பெறவும் தோட்டக்கலைத்துறையினர் வழங்கும் உயர்ரக வீரிய ஒட்டு விதைகளை வாங்கி பயன்பெறலாம். மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறை அலுவலர் வெங்கிடாசலபதி கூறியதாவது: அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் அரசு மானியத்தில் காய் கறி விதைகள் வழங்கப்படுகின்றன. தேவைப்படும் விவசாயிகள் மடத்துக் குளத்தில் உள்ள அலுவலகத்தில் பெற்று செல்லலாம். இத்துடன் மானிய விலையில் இயற்கை உரங்களும் வழங்கப்படுகிறது என்றார்.

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:46 IST

மடத்துக்குளம்: மடத்துக்குளம் பகுதி விவசாயிகளுக்கு தோட்டக்லைத்துறையினர் சார்பாக மானிய விலையில் விதைகள் வழங்கப்படுகிறது. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் பயன்படும் வகையில் தோட்டக்லைத் துறையினர் சார்பாக 50 சதவீத மானியவிலையில் காய்கறி விதைகள் வழங்கப்படுகின்றன. 10 கிராம் வெண்டைக்காய் விதை ரூ.90 க்கு விற்பனை

செய்யப்படுவது ரூ.45 க்கும், 250 கிராம் கத்தரிவிதை ரூ.280 க்கு விற்பனை செய்யப்படுவது ரூ.140 க்கும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. மடத்துக்குளம் பகுதி விவசாயிகள் அரசு வழங்கும் மானியத்தில் பயன்பெறவும், அதிக மகசூல் பெறவும் தோட்டக்கலைத்துறையினர் வழங்கும் உயர்ரக வீரிய ஒட்டு விதைகளை வாங்கி பயன்பெறலாம். மடத்துக்குளம் தோட்டக்கலைத்துறை அலுவலர் வெங்கிடாசலபதி கூறியதாவது: அனைத்து விவசாயிகளும் பயன்பெறும் வகையில் அரசு மானியத்தில் காய் கறி விதைகள் வழங்கப்படுகின்றன. தேவைப்படும் விவசாயிகள் மடத்துக் குளத்தில் உள்ள அலுவலகத்தில் பெற்று செல்லலாம். இத்துடன் மானிய விலையில் இயற்கை உரங்களும் வழங்கப்படுகிறது என்றார்.

## "ஆர்கானிக்' தேயிலைத் தூள் உற்பத்திக்கு முக்கியத்துவம் : தேயிலைத் தோட்ட நிர்வாகங்களுக்கு அழைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,04:12 IST

கூடலூர் : ""தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள், "ஆர்கானிக்' தேயிலைத் தூள் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும்," என, தேயிலை வாரிய செயல் இயக்குனர் அறிவுறுத்தினார். நீலகிரி - வயநாடு தோட்ட அதிபர்கள் சங்க 91 வது பொதுக்குழு கூட்டம், கூடலூர் தேவர்சோலை எஸ்டேட் கிளப்பில், நேற்று முன்தினம் நடத்தப்பட்டது. சங்கத் தலைவர் பூனசா வரவேற்றார்.

தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் பேசியதாவது: ஐரோப்பிய நாடுகளில், ஆர்கானிக் தேயிலைக்கு நல்ல வரவேற்பு உள்ளது; எதிர்காலத்திலும் நல்ல விலை கிடைக்கும். இதைக் கருதி, தேயிலை தோட்ட நிர்வாகங்கள், ஆர்கானிக் தேயிலைத் தூள் உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்க வேண்டும். தேயிலைத் தோட்டங்களில் வேலைக்கு ஆட்கள் கிடைப்பதில் நிலவும் சிரமங்களைப் போக்க, இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டும். தேயிலை வாரிய அலுவலகம் முழுமையாக கம்ப்யூட்டர் மயமாக்கப்பட்டு வருகிறது. தாமதமின்றி, விரைவில் மானியங்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும். தேயிலை வாரியத்தின் மானியத்தை மேலும் அதிகரிக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். 12 வது நிதிக் குழுவில், பிரச்னை குறித்து கோரிக்கை வைக்கப்படும். சுற்றுலாத் துறை, மாவட்ட நிர்வாகம் மற்றும் தேயிலை வாரியம் சார்பில், "தேயிலை மற்றும் சுற்றுலா வார விழா', வரும் 15-18 ம் தேதி வரை, ஊட்டியில் நடத்தப்படுகின்றன; இங்குள்ள தோட்ட நிர்வாகங்கள் பங்கேற்க வேண்டும்.இவ்வாறு, அம்பலவாணன் பேசினார்.

நீலகிரி - வயநாடு தோட்ட அதிபர்கள் சங்க 2010 -"11 ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவராக தயா அட்சயா ( தேவர்சோலை எஸ்டேட் பொது மேலாளர்), துணைத் தலைவராக பிரவீன் யாதேவ் (வெண்ட்வொர்த் எஸ்டேட் முதுநிலை மேலாளர்), செயலாளராக வாசுதேவன், செயற்குழு உறுப்பினர்களாக மகேஷ்நாயர் (கரோலின் எஸ்டேட் பொது மேலாளர்), ஐயப்பன் (வுட்பரேயர் குரூப் பொது மேலாளர்), ராஜ்குமார் (சசக்ஸ் எஸ்டேட் இணை மேலாளர்), ராம்புரியா (சில்வர் கிளவுட் எஸ்டேட் மேலாளர்), பூனசா (கிளண்ராக் எஸ்டேட்) தேர்வு செய்யப்பட்டனர்.தேயிலை வாரிய விரிவாக்க அலுவலர் போராய் உட்பட பலர் பங்கேற்றனர். மகேஷ்நாயர் நன்றி கூறினார்.

## தேயிலைத் தூள் கலப்படத்தை கட்டுக்குள் கொண்டு வர நடவடிக்கை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,22:32 IST

குன்னூர்: ""தேயிலைத் தூளில் சாயம் கலந்து விற்பது, சங்கிலித் தொடர் வணிகமாக நடந்து வருகிறது; கடுமையான தண்டனையை உரிய நபருக்கு வழங்கினால் மட்டுமே, கலப்படம் கட்டுக்குள் வரும்," என, தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறினார். நீலகிரியின் பொருளாதாரத்தை தாங்கிப் பிடித்து கொண்டிருக்கும் தேயிலைத் தொழிலில், கலப்படம் என்ற சட்ட விரோத செயல், பெரும் சவாலாக இருந்து வருகிறது. தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் தேயிலை ஏலத்தின் மூலம் தேயிலைத் தூளை வாங்கும் வியாபாரிகள் பலர், அதில் சாயம் கலந்து விற்கின்றனர்; இதன் மூலம் தங்களின் வருமானத்தை இரட்டிப்பாக்கி கொள்கின்றனர். சாயம் கலந்த தேயிலைத் தூளில் தயாரிக்கப்படும் தேநீரை பருகுவோருக்கு பலவித நோய்கள் ஏற்படுகின்றன. தேயிலைத் தூளில் சாயம் கலப்பதால் அவற்றின் தரம் பாதிக்கப்பட்டு, வர்த்தகர்கள் மத்தியில் நீலகிரி தேயிலை மீதான ஆர்வம் குறைகிறது. நீலகிரி மாவட்டத்தின் தேயிலைத் தூள் வளர்ச்சிக்கும், இது, பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. ""சாயம் கலந்த தேயிலைத் தூள் குறித்த விவகாரத்தில், மக்கள் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும்," என தேயிலை வாரிய செயல் இயக்குனர் அம்பலவாணன் கூறியுள்ளார். அவர் கூறுகையில், ""மாவட்டத்தில் உள்ள 100 க்கணக்கான தேநீர் கடைகள், ஓட்டல்களுக்கும், தேயிலை வாரிய அலுவலர்கள் நேரில் சென்று ஆய்வு செய்து, சாயம் கலந்த தேயிலைத் தூளை கண்டுபிடிப்பது கடினம்; தேயிலைத் தூளை வாங்வோர், தேநீர் பருகும் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். தேயிலைத் தூளை குளிர்நீரில் போட்டாலே, அதில் சாயம் உள்ளதா? இல்லையா என்பது தெரிந்து விடும். கடை, ஓட்டல்களில் விற்கப்படும் தூளில் சாயம் கலந்துள்ளதா? என்பதை மக்களே கண்டுபிடிக்க வேண்டும். கலப்பட தேயிலையின் புழக்கத்தை தடுப்பது சமுதாயக் கடமை என்பதை உணர வேண்டும். தேயிலைத் தூளில் சாயம் உட்பட பிற கலப்பட பொருட்களை கலந்து விற்பது, சங்கிலித் தொடர் வணிகமாக நடந்து வருகிறது. சாதாரண வியாபாரிகள் மீது நடவடிக்கை எடுப்பது பலன் தராது; மாறாக, கலப்படம் அல்லது சாயம் கலக்கும் பணியின் ஆணிவேராக செயல்படுபவர்களை கண்டறிந்து, அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே, கலப்படத்தை கட்டுக்குள் கொண்டு வர முடியும். இதுகுறித்த விழிப்புணர்வை, பொதுநல அமைப்புகள் ஏற்படுத்த வேண்டும்.
இவ்வாறு, அம்பலவாணன் கூறினார். தேயிலைத் தூளில் கலப்படம் இருக்கிறது என்பதை, வெறும் புகாராக மட்டும் சொல்லாமல், அவற்றை கண்டறிந்து கட்டுப்படுத்த வேண்டிய பொறுப்பு, மக்களுக்கும் உள்ளது. மக்கள் முன்வந்தால், தேயிலைத் தூளில் நிலவும் கலப்படப் பிரச்னைக்கு தீர்வு கிடைக்கும்.

## 65:35 சதவீத விலை நிர்ணயம் தேயிலை விவசாயிகள் எதிர்பார்ப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,01:26 IST

கோத்தகிரி: "தேயிலைத் தொழிற்சாலைகள் மற்றும் விவசாயிகளுக்கான 65:35 சதவீத ஒப்பந்தப்படி, விலை நிர்ணயிக்க வேண்டும்' என வலியுறுத்தப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்ட சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் நலன் கருதி, பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயம் செய்வது குறித்து ஆராய்ந்து முடிவெடுக்க, மாவட்ட கலெக்டர் தலைமையில் 14 உறுப்பினர்கள் கொண்ட குழு, 2007 ல் அமைக்கப்பட்டது; தேயிலை வாரியமும் அங்கம் வகிக்கிறது. பசுந்தேயிலைக்கு குறைந்தபட்ச விலை நிர்ணயிப்பது குறித்து, மத்திய அரசு எடுத்த நடவடிக்கையால், சராசரி தேயிலை விற்பனையில், தேயிலை உற்பத்தியாளர்களுக்கும், பசுந்தேயிலை வினியோகிப்பவர்களுக்கும் 65:35 சதவீத அடிப்படையில் பங்கீட்டு நெறிமுறை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. நடைமுறையை, சில தொழிற்சாலைகள் கடைபிடிப்பதில்லை; தேயிலை வாரியமும்

கண்டுகொள்வதில்லை. ஒவ்வொரு தேயிலைத் தொழிற்சாலையும், சிறு தேயிலை விவசாயிகள் வினியோக்கும் பசுந்தேயிலைக்கு, குறைந்தபட்ச உரிய விலையை, ஒவ்வொரு மாதமும் 10 ம் தேதிக்குள், தொழிற்சாலை அறிவிப்பு பலகையில் எழுதி தெரிவிக்க வேண்டும் என்ற அறிவுரையும் கடைபிடிப்பதில்லை. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால், பசுந்தேயிலை மகசூல் அதிகரிக்கும் நிலையில், 65:35 சதவீத அடிப்படையில் விலை வழங்க நடவடிக்கை எடுப்பதுடன், விலைப் பட்டியலை வைக்கவும் அறிவுறுத்த வேண்டும். பசுந்தேயிலை முதிர்ந்து விரயமாவதை தடுக்க, 50 சதவீத மானிய விலையில், பசுந்தேயிலை பறிக்கும் இயந்திரம் வழங்க வேண்டும் என்பதும், விவசாயிகளின் எதிர்பார்ப்பாக உள்ளது.  இதுகுறித்து, பொரங்காடு சீமெ நலச்சங்கம் சார்பில், மாவட்ட கலெக்டரிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது.

### மாவுப்பூச்சி தாக்குதலால் மரவள்ளி சாகுபடி பாதிப்பு: விவசாயிகள் கவலை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:23 IST

வேலாயுதம்பாளையம்: வேலாயுதம்பாளையம் சுற்றுப்பகுதிகளில் விளைந்துள்ள மரவள்ளி கிழங்கு செடி மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக காயத்துவங்கியுள்ளதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.வேலாயுதம்பாளையம் புகளூர் சுற்றுப்பகுதியில் நொய்யல், சேமங்கி, மரவாபாளையம், புங்கோடை, குளத்துப்பாளையம், நடையனூர், தோட்டக்குறிச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பரப்பளவில் மரவள்ளி கிழங்கு பயிரிடப்பட்டுள்ளது.இங்கு விளையும் மரவள்ளிகிழங்கு பெரும்பான்மையும்,  நாமக்கல் மாவட்டம் கிழங்கு மாவு ஆலைகளுக்கு எடுத்துக் செல்லப்படுகிறது. கிழங்கு மாவு மற்றும் ஜவ்வரிசி தயாரிப்புக்கு பயன்படுத்தப்படுகிறது. தற்போது இப்பகுதிகளில் மரவள்ளி கிழங்கு செடிகளை மாவுப்பூச்சி நோய் தாக்குதல் அதிகளவில் காணப்படுகிறது. பல இடங்களில் பயிரிடப்பட்டுள்ள மரவள்ளி செடியின் இலைகள் சுருண்டு, சில நாட்களில் வாடி விடுகின்றன.  கிழங்குகளும் எடை குறைந்து காணப்படுகிறது. இதனால் கிழங்கு எடை குறைவு மற்றும் விற்பனைக்கான தகுதியில் குறைந்துவிடுவதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்கு தள்ளப்பட்டுள்ளனர்.தோட்டக்கலைத்துறையினர், புகளூர் சுற்றுப்பகுதியில் மரவள்ளி கிழங்கு பாதிப்பு குறித்து ஆய்வு செய்து, விரைந்து நடவடிக்கை எடுக்க விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

### பண்ணை மகளிர், ஆண்களுக்கு பயிற்சி முகாம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:18 IST

கரூர்:  அரவக்குறிச்சி அருகே, முத்துசோளிபாளையத்தில் கரூர் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், கிராம அளவிலான பண்ணை மகளிர் மற்றும் ஆண்களுக்கான பயிற்சி நடந்தது.கரூர் மண் ஆய்வுக்கூட வேளாண்மை அலுவலர்கள் கவிதா, கவுசிகாதேவி ஆகியோர் பங்கேற்று மண்மாதிரி எடுக்கும் முறை, மண் பரிசோதனை செய்வதன் அவசியம், மண்மாதிரி எடுத்தப்பின் ஆய்வு முடிவுப்படி பயிர்களுக்கு உரமிடுதல், நீர்மாதிரி எடுப்பதன் அவசியம், எடுக்கும் முறை பற்றியும் கூறினர்.

பயிற்சி மைய வேளாண்மை அலுவலர் மோகன்குமார், செம் மை நெல் சாகுபடி, மஞ்சள் பயிரில் வரும் பூச்சி நோய், பராமரிப்பு, தென்னைக்கு உரமிடுதல், நுண்ணூட்டம் இடல், ஊடுபயிர் சாகுபடி பற்றி விரிவாக விளக்கினார். பயிர்களுக்கு மண்புழு கம்போஸ்ட் இடுவதன் அவசியம், கலப்பு பண்ணையம் முறை பற்றி விளக்கப்பட்டன.உழவர்மன்ற அமைப்பாளர் மல்லிகா நன்றி கூறினார்.

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:18 IST

கரூர்: அரவக்குறிச்சி அருகே, முத்துசோளிபாளையத்தில் கரூர் உழவர் பயிற்சி நிலையம் சார்பில், கிராம அளவிலான பண்ணை மகளிர் மற்றும் ஆண்களுக்கான பயிற்சி நடந்தது.கரூர் மண் ஆய்வுக்கூட வேளாண்மை அலுவலர்கள் கவிதா, கவுசிகாதேவி ஆகியோர் பங்கேற்று மண்மாதிரி எடுக்கும் முறை, மண் பரிசோதனை செய்வதன் அவசியம், மண்மாதிரி எடுத்தப்பின் ஆய்வு முடிவுப்படி பயிர்களுக்கு உரமிடுதல், நீர்மாதிரி எடுப்பதன் அவசியம், எடுக்கும் முறை பற்றியும் கூறினர்.

பயிற்சி மைய வேளாண்மை அலுவலர் மோகன்குமார், செம் மை நெல் சாகுபடி, மஞ்சள் பயிரில் வரும் பூச்சி நோய், பராமரிப்பு, தென்னைக்கு உரமிடுதல், நுண்ணூட்டம் இடல், ஊடுபயிர் சாகுபடி பற்றி விரிவாக விளக்கினார். பயிர்களுக்கு மண்புழு கம்போஸ்ட் இடுவதன் அவசியம், கலப்பு பண்ணையம் முறை பற்றி விளக்கப்பட்டன.உழவர்மன்ற அமைப்பாளர் மல்லிகா நன்றி கூறினார்.

## உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கணும்: விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 03,2010,02:52 IST

புதுக்கோட்டை: "புதுக்கோட்டை மாவட்டத்தில் உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க முன்வரவேண்டும்' என விவசாயிகளுக்கு கலெக்டர் சுகந்தி அழைப்பு விடுத்துள்ளார்.

புதுக்கோட்டை தாலுகா போரம் கிராமத்தில் நடந்த மக்கள் தொடர்பு முகாமுக்கு தலைமை வகித்து அவர் பேசியதாவது: மக்கள் தொடர்பு முகாமை முன்னிட்டு இப்பகுதி மக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 463 மனுக்கள் பெறப்பட்டு உரிய நடவடிக்கைக்காக தொடர்புடைய அலுவலர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. எட்டு மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழக அரசின் கான்கிரீட் வீடு வழங்கும் திட்டத்தின் கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 59 ஆயிரம் பேர் தகுதியுடையவர்களாக கண்டறியப்பட்டுள்ளனர். கம்ப்யூட்டர் மூலம் குலுக்கல் முறையில் இவர்களில் 9,929 பயனாளி தேர்வு செய்யப்பட்டு வீடு கட்டும் பணி துவங்கியுள்ளது. மீதமுள்ள பயனாளிகளுக்கும் இதுபோல கம்ப்யூட்டர் மூலம் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு ஆறு ஆண்டுக்குள் படிப்படியாக வீடு கட்டி கொடுக்கப்படும். இதுபோன்று மத்திய அரசின் ஐ.ஏ.ஒய்., திட்டத்தின் கீழ் வீடு வழங்க 1,671 பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கும் நிர்ணயித்த காலகெடுவுக்குள் வீடுகள் கட்டி வழங்கப்படும்.

உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டிய நிலையில் நம் நாடு உள்ளது. இதன்மூலம் மட்டுமே உணவு பற்றாக்குறையை தடுக்க முடியும். எனவே, விவசாயிகள் அனைவரும் உணவு தானியங்களின் உற்பத்தியை அதிகரிக்க முன்வரவேண்டும். இதற்காக செம்மை நெல் சாகுபடி போன்ற புதிய தொழில்நுட்பத்தை பின்பற்றி மகசூலை அதிகரிக்க வேண்டும். செம்மை நெல் சாகுபடி முறையை பின்பற்றும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் இடுபொருள், உரம் மற்றும் வேளாண் கருவி மானிய விலையில் வழங்கப்படுகிறது. இவற்றை விவசாயிகள் அனைவரும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

போரம் - மட்டையாம்பட்டி இடையே 13 லட்சம் ரூபாய் செலவில் விரைவில் சாலை அமைக்கப்படும். சாலைப் பணிகள் முடிவடைந்ததும் இதுவழி பஸ் வசதி செய்யப்படும். இதுபோன்று போரம் கிராமத்தில் புதிய பள்ளிக்கூடம் அமைக்க தேவையான நிலம் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

முகாமில், முதியோர் உதவித்தொகை, திருமண நிதி உதவி, பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களின் கீழ் ஆயிரத்து 80 பயனாளிக்கு 30.41 லட்சம் ரூபாய் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. வருமான வரித்துறை ஆணையர் ரெங்கராஜன், டி.ஆர்.ஓ., ராமதாஸ், புதுக்கோட்டை பஞ்சாயத்து யூனியன் தலைவர் ஜெயா, பெருங்களூர் பஞ்சாயத்து தலைவர் தங்கராஜ் உட்பட அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் பலர் பங்கேற்றனர்

## உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்கணும்: விவசாயிகளுக்கு கலெக்டர் அழைப்பு

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:14 IST

தஞ்சாவூர்: "பம்புசெட்டுகளில் மின் மீட்டர் பொருத்த விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்' என தஞ்சை மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் தங்கராஜு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழக அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு ""திறன்மிகு மின் பம்புசெட் வழங்கும் திட்டத்தை,'' அறிவித்துள்ளது. இத்திட்டம் முழுமையாக வெற்றி பெற்று மின் இழப்பை குறைக்க விவசாயிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். திறன்மிகு மின்பம்புசெட் பொருத்தப்பட்டவுடன், தற்பொழுது விவசாய மின் இணைப்பில் உள்ள மின்பம்பு செட்டை, இத்திட்டத்தை அமல்படுத்த நியமிக்கப்படும் மின் சேமிப்பு குழுமத்துக்கு திருப்பித் தர வேண்டும்.

இதனால் ஏற்படும் மின்சேமிப்பை அளவீடு செய்ய மின் இணைப்பில் மின் மீட்டர் பொருத்த மின் சேமிப்பு குழுமத்துக்கு அனுமதிக்க வேண்டும், இவ்வாறு மின் மீட்டர் பொறுத்தப்படுவது மின்சேமிப்பை கண்டறிய மட்டுமே அன்றி, மின்கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டு வசூல் செய்ய இல்லை.புதிதாக பொருத்தப்படும் திறன்மிகு பம்புசெட் தங்களின் மின் இணைப்பில்

ஐந்து ஆண்டுகள் சோதவை ஆய்வு முடியும் வரை இயக்கத்தில் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் விவசாயிகள் தங்களை இணைத்து பயனடைந்து நாட்டின் மின் பற்றாக்குறையை ஈடு செய்ய வேண்டும்.

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:14 IST

தஞ்சாவூர்: "பம்புசெட்டுகளில் மின் மீட்டர் பொருத்த விவசாயிகள் ஒத்துழைக்க வேண்டும்' என தஞ்சை மின்பகிர்மான வட்ட மேற்பார்வை பொறியாளர் தங்கராஜு தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்ட அறிக்கை:தமிழக அரசு விவசாய மின் இணைப்புகளுக்கு ""திறன்மிகு மின் பம்புசெட் வழங்கும் திட்டத்தை," அறிவித்துள்ளது. இத்திட்டம் முழுமையாக வெற்றி பெற்று மின் இழப்பை குறைக்க விவசாயிகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். திறன்மிகு மின்பம்புசெட் பொருத்தப்பட்டவுடன், தற்பொழுது விவசாய மின் இணைப்பில் உள்ள மின்பம்பு செட்டை, இத்திட்டத்தை அமல்படுத்த நியமிக்கப்படும் மின் சேமிப்பு குழுமத்துக்கு திருப்பித் தர வேண்டும்.

இதனால் ஏற்படும் மின்சேமிப்பை அளவீடு செய்ய மின் இணைப்பில் மின் மீட்டர் பொருத்த மின் சேமிப்பு குழுமத்துக்கு அனுமதிக்க வேண்டும், இவ்வாறு மின் மீட்டர் பொறுத்தப்படுவது மின்சேமிப்பை கண்டறிய மட்டுமே அன்றி, மின்கட்டணம் கணக்கீடு செய்யப்பட்டு வசூல் செய்ய இல்லை.புதிதாக பொருத்தப்படும் திறன்மிகு பம்புசெட் தங்களின் மின் இணைப்பில் ஐந்து ஆண்டுகள் சோதவை ஆய்வு முடியும் வரை இயக்கத்தில் இருக்க வேண்டும். இத்திட்டத்தில் விவசாயிகள் தங்களை இணைத்து பயனடைந்து நாட்டின் மின் பற்றாக்குறையை ஈடு செய்ய வேண்டும்.

**மூலிகை விரட்டி தயாரிப்பு இலவச பயிற்சி**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,02:20 IST

திருத்துறைப்பூண்டி: திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் இயற்கை விவசாய பண்ணையில் பயிர் வளர்ச்சிக்கான மூலிகை விரட்டி, முட்டை அமிலம், மீன் அமிலம் தயாரிப்பு குறித்து தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்ட விவசாயிகளுக்கு அக்டோபர் ஐந்தாம் தேதி ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.இப்பயிற்சியை நாகை வேளாண் விற்பனைக்குழு தலைவர் அம்பலவாணன் துவக்கி வைக்கிறார். ஆதிரெங்கம் பஞ்சாயத்து தலைவர் முருகதாஸ் முன்னிலை வகிக்கிறார். திருத்துறைப்பூண்டி ஜேசீஸ் சங்கம், ஜி.டி., ஃபவுண்டேஷன், பாலம் தொண்டு நிறுவனம், வேவ்ஸ் ஃபவுண்டேஷன், ஒற்றுமை அறக்கட்டளை ஆகியவை சார்பில் நடக்கிறது.பருவநிலை மாற்றத்தால் மிதமான மழையால் டெல்டா மாவட்டத்தில் சம்பா பயிரில் நோய் தாக்குதல் அதிகமாக வாய்ப்புள்ளது.

இயற்கை முறையில் மூலிகை பூச்சி விரட்டி தயாரித்து பயிர்களுக்கு தெளித்து பயிர்களை பாதுகாக்க வேண்டும்.தொடர் மழையால் பயிர் அழுகி சேதம் அடைவதை பாதுகாக்க, பயிர் வளர்ச்சி ஊக்கியான முட்டை அமிலம், மீன் அமிலம், வேப்பங்கொட்டை கரைசல் தயாரிக்கும் எளிய தயாரிப்பு முறை, அதை பயன்படுத்தும் முறைகளும், அனுபவம் வாய்ந்த இயற்கை விவசாய முன்னோடிகளால் பயிற்சி அளிக்கப்படுகிறது.இது முற்றிலும் இலவசமாக பயிற்சி. பயிற்சிக்கான சான்றிதழ் வழங்கப்படுகிறது. பயிற்சியில் இயற்கை விவசாய கையேடு, மூலிகை தேனீர், மதிய உணவு வழங்கப்படும்.முன்பதிவு செய்ய, "ஆதிரெங்கம் இயற்கை விவசாய பயிற்சி மையம், கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன், மொபைல் எண் 9443320954, 9842607609, 04369 220954,' என்ற ஃபோன் எண்ணில் தொடர்பு கொள்ளலாம், என கிரியேட் பயிற்சி இயக்குனர் ஜெயராமன் கூறினார்.

## விவசாயிகள், மக்களிடையே ஒத்துழைப்பு இல்லாததால் பயன்பாட்டிற்கு வராத திருமங்கலம் உழவர் சந்தை

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,03:11 IST

திருமங்கலம்:திருமங்கலம் உழவர்சந்தை பல ஆண்டுகள் மூடப்பட்டு இருந்தது. அதை சமீபத்தில் கலெக்டர் திறந்து வைத்தார். இருப்பினும், விவசாயிகள், மக்களிடையே ஒத்துழைப்பு இல்லாததால் பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட உழவர்சந்தை பயனற்று உள்ளது.திருமங்கலம் உழவர்சந்தை 2000 ஏப்., 16 ல் திறக்கப்பட்டது. விளைபொருட்களை விவசாயிகள் உழவர்சந்தையில் விற்கும்போது, காய்கறிகள், கனிகளை குறைந்த விலைக்கு வாங்கி மக்கள் பயனடைந்தனர். அ.தி.மு.க., ஆட்சியின்போது உழவர்சந்தைகள் மூடப்பட்டன. இதனால், தமிழகம் முழுதும் பல லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்ட உழவர்சந்தைகள் பயனின்றி போயின. 2006 ல் மீண்டும் தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும் உழவர்சந்தைகள் செயல்பாட்டிற்கு வந்தன.எனினும், திருமங்கலம் உழவர்சந்தைக்கு மட்டும் விடிவு பிறக்கவில்லை. திருமங்கலம் - உசிலம்பட்டி ரோட்டில் தினமும் காய்கறி சந்தை நடக்கிறது.

விவசாயிகளை மீண்டும் உழவர்சந்தைக்கு வரவழைக்க கலெக்டர் காமராஜ் முயற்சி எடுத்தார். இதையடுத்து சமீபத்தில் உழவர்சந்தையை முறைப்படி மீண்டும் திறந்து வைத்தார். ஆனால், விவசாயிகள், மக்களிடையே ஒத்துழைப்பு இல்லாததால் உழவர்சந்தை மீண்டும் முடங்கியது.பயனற்று கிடக்கும் உழவர்சந்தையை பாதுகாக்க வேளாண் விற்பனைத்துறை சார்பில் நிர்வாக அலுவலர், இரண்டு உதவி நிர்வாக அலுவலர், மூன்று வாட்ச்மேன்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டாக இவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட்டு வருகிறது. திருமங்கலம் - உசிலம்பட்டி ரோட்டில் நடக்கும் காய்கறி சந்தையை உழவர்சந்தைக்கு மாற்ற வேண்டும்.இதற்கிடையே, திருமங்கலம் நகராட்சி சார்பில் உழவர்சந்தையை வேறொரு இடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிகிறது. இதனால், உழவர்சந்தை, காய்கறி அங்காடி நிரந்தரமாக பயனற்று விடுவது உறுதி. விவசாயிகள், சிறு வியாபாரிகள், மக்கள் நலன் கருதி உழவர்சந்தை மற்றும் காய்கறி அங்காடியை மீண்டும் திறக்க

நகராட்சி நிர்வாகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் முயற்சி எடுக்க வேண்டும். இதனால், திருமங்கலம் - உசிலம்பட்டி ரோட்டில் நெரிசல் குறையும்.

**விவசாய பம்பு செட்டுகளுக்குமின் இணைப்பு**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:26 IST

மதுரை:""தமிழக அரசு விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கியுள்ளது. அதை தொடர்ந்து மதுரையில், விவசாய பம்பு செட்டுகளுக்கான 1244 மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது," என கலெக்டர் காமராஜ் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது:சாதாரண வரிசையில் 450 மின் இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதித் திட்டம் ரூபாய்.10,000 ன் கீழ் 108 இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம் ரூபாய்.25,000 ன் கீழ் 524 இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம் ரூபாய்.50,000 கீழ் 160 இணைப்புகளும், ஜீவன்தாரா எஸ்.சி, எஸ்.டி. மற்றும், எஸ்.சி, எஸ்.டி. அல்லாதோர், திட்டத்தின் கீழ் தலா ஒரு இணைப்பும் மொத்தம் 1244 மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது. இது பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்படும் என கூறியுள்ளார்.

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,02:26 IST

மதுரை:""தமிழக அரசு விவசாய நிலங்களுக்கு மின் இணைப்பு வழங்க உத்தரவு வழங்கியுள்ளது. அதை தொடர்ந்து மதுரையில், விவசாய பம்பு செட்டுகளுக்கான 1244 மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது," என கலெக்டர் காமராஜ் தெரிவித்துள்ளார். மேலும் அவர் கூறியுள்ளதாவது:சாதாரண வரிசையில் 450 மின் இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதித் திட்டம் ரூபாய்.10,000 ன் கீழ் 108 இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம் ரூபாய்.25,000 ன் கீழ் 524 இணைப்புகளும், திருத்தியமைக்கப்பட்ட சுயநிதி திட்டம் ரூபாய்.50,000 கீழ் 160 இணைப்புகளும், ஜீவன்தாரா எஸ்.சி, எஸ்.டி. மற்றும், எஸ்.சி, எஸ்.டி. அல்லாதோர், திட்டத்தின் கீழ் தலா ஒரு இணைப்பும் மொத்தம் 1244 மின் இணைப்பு வழங்கப்பட உள்ளது. இது பதிவு மூப்பு அடிப்படையில் வழங்கப்படும் என கூறியுள்ளார்.

**உழவர்சந்தை பராமரிப்பு இல்லை சகதியில் நடக்கும் பொது மக்கள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 04,2010,01:46 IST

திண்டுக்கல்: திண்டுக்கல் உழவர்சந்தையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். உழவர்சந்தையில் மழைநீர் செல்ல சரியான பாதையில்லாததால் தண்ணீர் தேங்கியுள்ளது. கழிப்பறைகளில் தண்ணீர் வசதியில்லை. வெளியில் இருந்து தண்ணீர் கொண்டு வருவதால் முழுமையாக சுத்தம் செய்வதில்லை.
கடைகளுக்கு பொதுமக்கள் நடந்து செல்லும் பாதையில் அமைக்கப்பட்டிருந்த சிமென்ட் தளம் சேதமடைந்துள்ளது. மழைகாலம் என்பதால் பொதுமக்கள் சகதிக்குள் நடக்கும் நிலை உள்ளது. மாவட்ட கலெக்டரால் துவக்கி வைக்கப்பட்ட ஆவின் விற்பனை நிலையமும், சுயஉதவிக்குழு மூலம் நடத்தப்பட்ட பழங்கள் விற்பனை நிலையமும் பூட்டி கிடக்கிறது. வேளாண்மை விற்பனை குழு துணை இயக்குனர் மணியம் கூறுகையில்,"உழவர்சந்தை பராமரிப்புக்கு தனி நிதி எதிர்பார்க்கிறோம். நிதி வந்தவுடன் பணி துவங்கும். தேங்கிய மழைநீரில் மணல் கொட்டவும், ஆவின் பூத், பழக் கடையை திறக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்,'என்றார்.

## விவசாயிகளுக்கு இலவச எஸ்.எம்.எஸ்., வேளாண்துறை அறிமுகம்

பதிவு செய்த நாள் : அக்டோபர் 02,2010,00:13 IST

ராமநாதபுரம்:விவசாயிகளுக்கு வானிலை நிலவரம் உள்ளிட்ட விபரங்களை எஸ்.எம்.எஸ்., மூலம் இலவசமாக வழங்கும் திட்டம் ,வேளாண் துறையால் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசு மூலம் "அக்ரிஸ்நெட்' என்ற வேளாண் வெப்சைட் தொடங்கப்பட்டுள்ளது. இதைதொடர்ந்து கிராமம் வாரியாக விவசாயிகள் மற்றும் வேளாண் சாகுபடியாளர்களின் அடிப்படை புள்ளி விபரங்கள் பதியும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. விவசாயி பெயர், கல்வித்தகுதி, இனம், சாகுபடி பயிர்கள், அனுபவம், நில உடமையின் அளவு, வங்கி கணக்கு , மொபைல் போன் எண் போன்ற விபரங்கள் இந்த பதிவில் அடங்கும்.

பதிவு செய்யப்படும் ஒவ்வொரு விவசாயிகளுக்கும் தனித்தனி அடையாள எண் வழங்கப்படுகிறது. பல்வேறு திட்டங்களில் பயன்பெற வேண்டி, விவசாயிகளுக்கு முன்னுரிமை வழங்கும் நடவடிக்கை மேற்கொள்ளவே இந்த பதிவு உதவும். தேசிய அளவில் விவசாயிகளை அடையாளம் காணவும், வெப்சைட்டின் பதிவு விபரம் முக்கியத்துவம் பெறும். இத்திட்டத்தின்படி வானிலை விபரம், சந்தை நிலவரம், புதிய திட்டங்களின் விபரங்கள், தொழில்நுட்ப ஆலோசனைகள் விவசாயிகளின் மொபைன் எண்களுக்கு இலவச குரூப் எஸ்.எம்.எஸ்., மூலம் அனுப்பவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன் பணிகள் தொடங்கியுள்ள நிலையில், இதற்காக நியமிக்கப்பட்டுள்ள வேளாண் துறை களப்பணியாளர்கள் துரிதப்படுத்தப்பட்டுள்ளனர். இத்திட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தில் மட்டும் 4 லட்சத்து 25 ஆயிரத்து 600 விவசாயிகளின் விபரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.
ராமநாதபுரம் வேளாண் இணை இயக்குனர் சத்தியமூர்த்தி கூறியதாவது: "அக்ரிஸ்நெட்' வெப்சைட் பதிவு விவசாயிகளுக்கு பெரிய அளவில் உதவும். இதற்கான பணிகள் தமிழகம் முழுவதும் தொடங்கியுள்ள நிலையில், அந்தந்த பகுதி வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் கிடைக்கும் படிவங்களை பூர்த்தி செய்து பயனடையலாம், என்றார்.